ஞானதீபம்

மலர் 14 இதழ் 3

JL

R6ஊ214N18GN

N23.14.3

210792

412

Registered M. 878

ஓம்

16 JAN 1924

# ஞானோதயம்

பிரம்மஞ்ஞான மாதாந்தப் பத்திரிகை

பத்திராதிபர்கள்
அ. ரங்கஸ்வாமி ஐயர் பி. ஏ., பி. எல்.,
மதுரை.
இ. என். சுப்பிரமணிய ஐயர் பி. ஏ.,
அடையாறு.

தோகுதி 14] 1923வரு செப்டெம்பர்மீ 21உ [பகுதி 3

பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | இந்தியாவில் ஸர்வஜன ஸஹோதரதர்ம விஜயம் | ... 65 |
| 2. | ஸர்வஜன ஸஹோதரதர்ம விஜயம் முதல்வாரம் (மதங்களில்) | ... 67 |
| 3. | ,, ,, 2-ம் வாரம் (கல்வி முறையில்) | ... 71 |
| 4. | ,, ,, 3-ம் வாரம் (குற்றவாளிகளிடத்தில்) | ... 75 |
| 5. | ,, ,, 4-ம் வாரம் (பற்பலதேசத்தார்க்குள்) | ... 79 |
| 5. | ஜீவனும் ஜீவனுடைய உபாதிகளும் | ... 83 |
| 6. | பத்திராதிபர் குறிப்புக்கள் | ... 86 |
| 7. | பிரஹ்மஞானப் பிரசாரம் | ... 90 |

அடையாறு பிரம்மஞ்ஞானத் தமிழ்ப் பிரசுரச்
சங்கத்தாரால் வெளியிடப்பட்டது

வருஷச் சந்தா 2-0-0.] [தனிப்பிரதி 4 அணா

# அடையாறு பிரஹ்மஞானத் தமிழ்ப்பிரசுரச் சங்கம்.

---

மேற்படி பெயரால் ஒரு சங்கம் சென்ற வருஷம் ஏப்ரல் மீ ஏற்பாடாகி 1860-ஆம் வருஷத்திய 21 ஆவது ஆக்டின்படி ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.

பிரஹ்மஞானசபையில் ஆங்கிலேய பாஷையில் பிரசுரம் செய்திருக்கப்பட்ட கிரந்தங்களைத் தமிழில் மொழிபெயர்த்து அச்சிட்டு வெளியிடவேண்டும் என்ற முக்கிய நோக்கங்கொண்டே அது ஸ்தாபிக்கப் பெற்றது. பிரஹ்மஞானசபை அங்கத்தினர்களே இதில் மெம்பர்களாகலாம். பத்து ரூபாய் ஒரே மொத்தமாகவோ அல்லது தவணையிலோ கொடுப்பவர்கள் அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ளப்படுவர். அப்படியே நூறு ரூபாய் கொடுப்பவர்கள் காரிய நிர்வாகசபையிலும் அங்கத்தினராகலாம்.

நமது கிரந்தங்களை அச்சிடுவதில் ஏற்கெனவே சிரமம் தோன்றுகிறபடியால் நமக்குச் சொந்த அச்சியந்திரசாலை கூடிய சீக்கிரம் ஏற்படுத்த வேண்டும். இதற்கு ரூபா 3,000 நமக்குத் தேவை. இப்போது பிரஹ்மஞானபிரசாரக வேலைக்காக பத்து ரூபாய் கொடுக்கக்கூடியவர்கள் 300 மெம்பர்களாவது நமது தமிழ் நாட்டில் இல்லையா? காரிய நிர்வாக சபையிற்சேர்ந்த ஒவ்வொருவருக்கும் இச்சபையால் பிரசுரமான கிரந்தங்களில் ஒரு பிரதி இனாமாகவும் அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் புத்தகம் அரைவிலைக்கும் கொடுப்பதாக உத்தேசித்திருக்கிறது. இதன் விவரமறிய விரும்புவோர் காரியதரிசிக்கு எழுதிக்கொள்ளலாம்.

ஸர். தி. ஸதாசிவ ஐயர்
அக்ராஸனர்.

யம். எஸ். கணேச ஐயர்
வக்கில், சிவகங்கை.

ஸி. என். சுப்பிரமணிய ஐயர், பி. ஏ.
பத்த விலாசம், அடையாறு.

**காரியதரிசிகள்.**

# ஞானோதயம்

பிரம்மஞ்ஞான மாதாந்தப் பத்திரிகை

தொகுதி 14] 1923ஸு செப்டெம்பர்மீ 21உ [பகுதி 3

## இந்தியாவில் ஸர்வஜன ஸஹோதரதர்ம விஜயம்.

இப்பிரசாரகவேலை வருகிற அக்டோபர் ௴ முதல் டிஸெம்பர் ௴ வரை ஒழுங்காய நிறைவேறுவதற்கான முயற்சிகள் நடந்தேறிவருகின்றன. பிரஹ்மஞானசபை இந்தியன் ஸெக்ஷன் பொதுக்காரியதரிசியாகிய ராய் பஹதூர் பூர்ணேந்து நாராயண ஸிம்ஹா அவர்கள் ஸகோதரத்துவத்தை நன்கு உதகரித்தெழுதிய "இயற்கையில் இயங்கும் ஈசன்" (God through Nature) என்னும் ஆங்கிலச் சிறுபுத்தகமொன்றை தம் சொந்தச்செலவில் பிரசுரித்து, ஒவ்வொருகிளைச் சபைக்கும் ஸெண்டருக்கும் இனமாக அனுப்பியிருக்கின்றனர். ஞானோதயத்தின் முதற் பகுதியிற் கூறியபடி, பன்னிரண்டு வியாசங்கள் ஸஹோதரபாவத்தின் வெவ்வேறு அம்சங்களைப் பற்றி விவரித்தெழுதப்பட்டிருக்கின்றன. இந்த சஞ்சிகையில் முதல் நான்கு வியாஸங்கள் வெளியாகியிருப்பதை நமது சந்தாதார்கள் படித்துப் பார்ப்பார்களாக. இதே மாதிரி அடுத்த இரண்டு சஞ்சிகைகளிலும் சகோதரபாவத்தைப்

[illegible]ற்றி வெவ்வேறு நா[illegible] வியாஸங்கள் வெளியாகும். நமது மெம்[illegible]ர்களும் சந்தாதாரர்களும் தத்தம் ஊர்களில் பிரசாரகவேலைக்கு இம்மூன்று மாதங்களிலும் வரும் ஒவ்வொரு நான்கு வியாஸங்களையும் துண்டுப்பத்திரங்களாகப் பிரசுரித்து பரப்புவதில் எவ்வித யாதொரு ஆக்ஷேபமுமில்லை. இவ்வாறே தியாஸபிஸ்ட், நியூ-இந்தியா, என்ற ஆங்கிலப்பத்திரிகையிலும் ஸ்வதேசபாஷைகளிலுள்ள எல்லா பிரஹ்மஞான பத்திரிகைகளிலும் இவை பிரசுரிக்கப்படும். நம் தமிழ்நாட்டிலுள்ள மற்ற தமிழ்ப்பத்திரிகைகளும் இவற்றை பிரசுரித்துதவுவார்களாயின் ஏககாலத்தில் இம்மூன்று மாதங்களில் நந்தேசமெங்கும் ஸோதரவுணர்ச்சியைப்பற்றிய சிந்தனை அதிகரிப்பதற்கெவ்வளவோ சாதகமாகும். மேலும் ஸஹோதரத்துவ விஷயமான ஆடல் பாடல்கள், உபந்யாஸங்கள், பஜனைகள், ஹரிகதைகள் எல்லாவற்றிற்கும் எம்மாலியன்றமட்டும் ஏற்பாடுசெய்து ஷை துண்டுப்பத்திரங்களைப் பிரசுரித்துப்பரப்பவும் முயன்று வருகிறோம். இவ்வாறு நம்மெம்பர்களும் சந்தாதாரர்களும் வெளியூர்களில் முயன்றுவர வேண்டுகிறோம். இதற்கு விசேஷ உதவிக்காக அடையாற்று ஸ்ரீமான் எஸ். ராஜாராம் காரியதரிசியாக நியமிக்கப்பெற்றிருக்கிறார். இது விஷயமான விவரம் தெரியவேண்டியவர்கள் அவருக்கு நேரே எழுதலாம்.

தென்னிந்தியாவில் கோயம்புத்தூர் ஸ்ரீமான் T. R. பாஷ்யாசாரியரவர்களும் மாயவரம் தி. ஸதாசிவராவ் அவர்களும் மேற்கு வடக்குத்தமிழ்ப் பிரதேசங்களில் உழைக்கப் பொறுப்பேற்றுக்கொண்டு ஒருங்கே முயன்று வருகின்றனர். தெலுங்கு ஜில்லாக்களுக்கும், இங்குள்ள ஸெண்ட்ரல் ஆபிஸ் செலவுக்கும், ஸ்ரீமான் வீ. ராமய்யா பந்துலுகாரு, பி. ஏ., எல். டி. பொறுப்பேற்றுக்கொண்டிருக்கின்றனர்.

இதுவரை கிடைத்த திரவிய சகாயம் பின்வருமாறு:— பெயர்விழையான் ரூ 100; ஸ்ரீமான் ஸி. என். சுப்பிரமணிய ஐயர், பி. ஏ. எல். டி. ரூ 25; ஸ்ரீமான் வி. ஸி. சேஷாசாரியர். பி. ஏ. பி. எல். ரூ 25; ஸ்ரீமான். யம். யன். ராமஸ்வாமி ஐயர். யம். ஏ., திருச்சி ரூ 25; ஸ்ரீமான் வி. ராமசந்திரநாயுடு, என்னங்குடி, ரூ [illegible]5; ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸஐயங்காரவர்கள், திருச்சி ரூ [illegible]5; தஞ்சாவூர் ஸ்ரீமான் டி. வி. கோபாலஸ்வாமி ஐயர் ரூ 10; ஸ்ரீமான் கே. வி. சேஷஐயங்கார் பி. ஏ., பி. எல்., மைலாப்பூர் ரூ 5; ஸ்ரீமான் ஆர். முதலியாண்டான் செட்டியார், அடையாறு ரூ 5.



பிரதிமனிதரையும், ஒவ்வொரு தேசத்தாரையும் உலகமுழுவதையுமே வாழ்த்தவும் வீழ்த்தவுங்கூடியது சிந்தனாசக்தி. ஆகையால் உலகனைத்தும் நாமனைவரும் சகோதரர்கள், உலகெங்கும் நலமோங்குக என்பதையே எப்போதும் எண்ணி நம் தேசத்தார் ஒவ்வொருவரும் நம்மால் கூடிய ஒவ்வொரு வகையிலும் இம்முயற்சிக்காக உழைத்தல் மிகச் சிறந்த தேசபக்தியாகும். இதில் நாநாஜாதிமதஸ்தரும் ஆடவர் பெண்டிரும் மாணவர்களும், சர்க்கார் உத்யோகஸ்தர்களும் நிர்ப்பயமாய் ஒத்துழைக்கலாம். அதற்கேற்றபடி வெளியூர்களில் இப்பற்பலதிறத்தாரையும் அணிவகுத்து வேலைசெய்யச்செய்தல் நம் மெம்பர்களையும் சந்தாதாரர்களையும் விசேஷமாய்ப் பொறுத்த கடமை எனச் சொல்லத் துணிந்தோம்.

ஸ. ராஜாராம்
சீ. என். சுப்பிரமணியன்

---

## ஸர்வஜன ஸஹோதரதர்ம விஜயம்.

அக்டோபர் 1923 முதல் வாரம்.

### ஸஹோதரபாவம் (மதங்களில்)

"எவர்கள் என்னை எவ்வாறு அடைகிறார்களோ அவர்களை நான் அவ்வாறே அநுக்கிரகிக்கின்றேன். பார்த்தா! மனிதர் எவ்வாற்றாலும் என் வழியை அனுசரிக்கிறார்கள்." கீதை 4-11.

உலக சரித்திரத்தில் தொன்றுதொட்டு நாளிது வரை பற்பல தேசத்தார்களும் ஜாதியர்களும் ஒருவரோடொருவர் பொருதின யுத்தங்கள் மிகப் பலவாம். அவற்றுட் பெரும்பான்மை மத த்வேஷத்தாலும், ஓர் மதத்தின் உட்பிரிவினர்களுக்குள் இருந்த வைஷம்யத்தாலும் நேர்ந்தவை. ஆண்டவன் பெயரைச் சொல்லிக்கொண்டே அவருடைய கட்டளையாகிய சகோதரபாவம், அன்பு என்பதற்கு நேர் விரோதமாய்ச் செய்த கொடுமைகள் எண்ணிறந்தன. நம் சாமானிய புத்தியைக் கொண்டு சற்றும் பக்ஷபாதமின்றி யோசித்தால், அவர்கள் அவ்வாறு ஏன் செய்தார்களென்று விசனிப்போம். இப்படிப்பட்ட மதவைஷம்யத்தையும் பேத புத்தியையும்

கண்டு, புத்திநுட்பமுடைய நாஸ்திகர்களும் அநாத்மவாதிகளும் நகைப்பதற்கு இடமாகிறது. அவர்களோ ஒரே அடியாய்க் கூறுவதென்னவெனில்:—

எல்லா மதங்களும் அஜ்ஞானதசையிலிருந்த ஆதிகாலத்து மனிதர்களால் ஏற்பட்டவை; அவ்வாதி மனிதர் ப்ரகிருதியின் உண்மைகளை அறியாதவர்கள்; அவ்வறிவீனத்தால் காற்று மழை மின்னல் இடிமுழக்க முதலியவற்றால் பயம்பிடித்து, தம் பயத்தைத் தீர்த்துவைக்கும் பராக்கிரமசாலியான கடவுள் ஒருவரையோ பலரையோ கற்பித்துக்கொண்டனர்- என்பதேயாம். ஆனால் அவ்வநாத்மவாதிகளும் நாஸ்திகர்களும் பொதுவாய் எம்மதமும் இவ்வாறே வந்ததென்று கொண்டாலும், எல்லா மதங்களையும் ஒப்பு நோக்கி ஆராய்ந்து வருகிறார்களாகையால், ஸர்வ மதங்களிலும் உள்ள பொதுத் தன்மையை அவர்கள் எடுத்துக் கூறுங்கால் எம்மதத்தாரும் நிர்விவாதமாய் ஒப்புக்கொள்ளவே நேருகிறது. ஆகையால் ஆஸ்திகர்களாகிய நாம் பிற மதங்களைத் துரபிமானமின்றி அவர்களைப்போலவே ஒப்பு நோக்கிப் பொதுத் தன்மையைக் கொள்வோமாயின், எம்மதமும் ஈசுவரனுக்குச் சம்மதமே என்பது தெளிவாகும். நாம் கூறும் நாஸ்திகர்களுக்கும் அநாத்மவாதிகளுக்கும் நம்மவ்வளவு துரபிமானம் இல்லை என்பதை நினைக்கையில் இன்னும் விந்தையாயிருக்கிறது.

இனி, இவ்வாறு சண்டைகள் நேருவதற்குத் தான் என்ன காரணம், இவ்வித துரபிமானம் என்னத்துக்காக, ஸர்வ மதங்களும் எவ்வாறு ஒரே தன்மையன, மத விஷயத்தில் ஒற்றுமை விளைக்கக் கூடியவை எவை என்பவற்றை ஆராய்வோம். இதன் விஷயமாக "மதங்களின் ஸகோதரபாவம்" என்பதாக ஓர் ஆங்கிலத் துண்டுப் பத்திரிகை சுருக்கமாகவும் விளக்கமாகவும் டாக்டர் அனிபெஸண்ட் அம்மையார் அவர்களால் இயற்றப் பெற்றிருக்கிறது.

பரமார்த்த தர்மத்தின் விசேஷ அம்சம் ஒவ்வொரு மதத்திலும் ஒவ்வொன்றுளதாயினும், அதை மிதமிஞ்சி அம்மதஸ்தர்கள் வற்புறுத்துவதிலிருந்து அது காலாந்தரத்தில் விபரீதமாகி ஸமரஸ பாவத்திற்கு விரோதப்பட்டிருப்பதைக் காண்கிறோம். இதிலிருந்து படிப்படியாய் மூடாசாரங்கள் வளருகின்றன. ஸாரமான கருத்தொன்றை வைத்து நிஸ்ஸாரமான ஆசரணைகள் ஆயிரம் பிரபலமாகின்றன. கடைசியில் ஸாரம் இன்னதென்பதே ஜனங்கட்கு மறந்து போகிறது. இதனால் அம்



மதத்தினர் தம் மத உண்மைகள் பலவற்றின் யதார்த்த முக்கியதை எம்மட்டு என்று நிதானித்துக் கொள்ளமாட்டாமற் போகிறார்கள். இவ்வாறு விவேகமும் ஆராய்ச்சியும் மழுங்கவே, ஒவ்வொரு மதமும் தன் ஸ்வதர்மத்துக்கு நேர்மாறாக நடந்து வருகிறது உண்மை. ஹிந்து மதத்தை உதாரணமாகப் பார்ப்போம். அதன் உபதேசம் என்னவெனில், "ஈசன் அன்புமயன், எங்குமுளன்; மனித குலமனைத்தும் ஒன்று" என்பதேயாம். ஆனால் ஈசுவரனுக்கு என்று சொல்லி பிராணிகளை பலியிடுவதும், தீண்டாச் சாதியார்களென்று சிலரை ஒதுக்கி வைப்பதும் ஆகிய கோணலான ஆசாரங்கள் எப்படி வந்திருக்கின்றன! பாருங்கள். கிறிஸ்தவ மதத்தைப்பார்க்க. கிறிஸ்துவை உண்மையாய் வழிபட்டு அவரை மகிமைப்படுத்த வேண்டியவர்கள் உலகில் சமாதானத்தையும் சாந்தியையும் நிலைக்கச் செய்ய வேண்டியதிருக்க, அயர்ந்து தூங்குவோன் தலையில் பாறாங்கல்லை எந்தநிமிஷம் போடுவார்களோ எனும்படியாக, உலகில் யுத்தவெறியை எந்நிமிஷத்தில் எந்த இடத்தில் கிளப்பி திராணியற்ற எத்தேசத்தாரை அமிழ்த்துவார்களோ அறிகிலேம். ஆத்மரக்ஷணம் என்னும் மேன் மார்க்கத்தைக் கிறிஸ்தவ மதம் அப்பியசிக்கத் தொடங்கி, இப்போது அகந்தை யெனும் கீழ் மார்க்கத்தில் வந்து சேர்ந்திருக்கிறது. அம்மதத்தார் கிறிஸ்துவைப் பின்பற்றிய அழகு இவ்வளவிலிருக்கிறது. இவ்வாறே ஒவ்வொரு மதமும் தன் தருமத்தினின்று வழுவி அதர்மத்தில் வீழ்ந்து கிடக்கிறது. ஆகையால் தான் நாம் சண்டையை ஒழிக்க விரும்புவோமாயின் ஒவ்வொரு மதத்தாரும் தத்தம் மதத்தின் மூலதத்துவமின்னது மூடாசாரங்கள் இன்னவை யென்று விவேகத்தோடு பகுத்தறிதல் வேண்டும்.

இந்நோக்கங் கொண்டவர்களுக்கு நாநாமதங்களில் சாதகமுண்டேயன்றி பாதகமில்லை. ஸ்ரீமதி டாக்டர் அனிபெஸண்ட் அம்மையார் கூறுவதாவது:—

"பிற மதங்களில் விளங்காத விசேஷ தர்மம் ஒன்று ஒவ்வொரு மதத்திற்கும் உள்ளது. எந்த மதம் எவ்வளவு பரிபூர்ணமாயிருப்பினுஞ் சரி, அதை ஸ்தாபித்தவர் எத்தகைய பெரியாராயிருப்பினுஞ் சரி, ஈசனுடைய அபார மகிமையையும் பூர்ணத் தன்மையையும் விளக்கிக் காட்டுதல் அசாத்தியமே. உலகெலாஞ் சேர்ந்தும் அவருடைய சொரூபத்தின் ஓர் அம்சத்தைத் தான் பிம்பித்துக் காட்ட வல்லது. எண்ணி

நந்த பிரபஞ்சங்களெல்லாம் கூட அவரை உள்ளபடி தோற்றுவித்தல் முடியாது"

இந்தியாவில் மட்டுமுள்ள மதங்களைப்பற்றி ஸ்ரீமான் ஜினராஜதாஸர் "The Gift of India to all Nations" என்ற ஓர் பிரசங்கத்தில் சில விஷயங்களை வெகு அழகாய்ப்பகுத்துக்கூறியிருக்கிறார். பார்ஸீமதத்தின்படி ஒவ்வொருவனும் ஈசனின் கக்ஷியைச்சேர்ந்த வீரன். பார்ஸீக்களுடைய தர்மம் இவ்வுலக விஷயங்களை வெறுத்துத் துறவியாதலல்ல, பின்னை கடவுளுடைய வீரஸேவகனாக உலகில் வாழ்ந்து போராடவேண்டியதேயாம். எதையும் சீர்திருத்துவதிலேயே அவன் கண்ணாயிருத்தல் வேண்டும். இஸ்லாம் மதத்தின்படி மகம்மதியர்களெல்லோரும் ஸஹோதரர்களே யாவர். பௌத்த மதத்தில் மனிதர்களின் ஸ்வாதந்த்ரியம் வற்புறுத்தப்பட்டிருக்கிறபடி வேறெதிலும் இல்லை. கீழான ஜீவராசிகளை மனிதன் ரக்ஷித்தல்வேண்டும் என்பது ஜைன மதத்தின் விசேஷகுணம். ஒவ்வொருவரிடமும் ஈசுவராம்சமுள்ளதென்பதை ஹிந்துமதத்தைப்போல் விளக்குகிறதெதுவுமில்லை.

ஆகவே ஹிந்துமதம் தர்மத்தையும், பார்ஸிமதம் சுத்தத்தையும், பௌத்தமதம் ஞானத்தையும், கிறிஸ்தவமதம் தியாகத்தையும், இஸ்லாம் மதம் தாழ்மையையும், உபதேசிக்கின்றன. இவ்வெல்லா நற்குணங்களும் ஒவ்வொரு மதத்தாருக்கும் அவசியந்தானே! இவ்வெல்லாம் ஒவ்வொரு மதத்திலும் கூறப்பட்டிருப்பினும், ஒவ்வொன்று மட்டும் விசேஷமாய் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. ஆகையால் மற்றவை அவ்வளவு பிரபலமாகத் தெரிகின்றனவல்ல. மதங்களின் இப் பரம தத்துவங்களெல்லாம் பொதுவில்யாவரும் அடைந்தநுபவித்தற்குரிய ஆத்ம ஸம்பத்துக்களேயன்றி ஒரு தனி மதத்துக்கு மட்டுமே உரியனவென்பது பொருந்தாது. ஜனங்கள் இவ்வுண்மையை அறிவரேயாயின் சண்டை ஒழியும்.

மதங்களை யெல்லாம் ஒப்பிட்டுப்படிப்பவர்கட்கு, எல்லாவற்றிலும் பொதுவான அம்சங்கள் எத்தனையோ உள்ளனவென்பது விளங்கும். உதாரணமாகச் சிலுவை கிறிஸ்தவ மதத்திற்கே உரிய சின்னமென்று நினையாதீர்கள். இச் சின்னம் எட்ரூரியா, எகிப்து, இந்தியா, சால்டியா, அஸ்ஸிரியா, மெக்ஸிகோ, ஸ்காண்டிநேவியா முதலிய தேசங்களிலெல்லாம் விளங்கி வந்திருப்பனவாக, ஆராய்ச்சியால் தெரிகிறது. அப்படியே தான் ஐந்துமுக நக்ஷத்ரமும், அறுகோண யந்திரமும்.



கடவுள் ஒருவரே; அவர் முப்பான்மையாய் விளங்குகிறார்; பல படித்தரமான தேவரிஷி கணங்களைக் கொண்டு ஸர்வலோக அரசாட்சி செய்கிறார்; மனிதன் ஈசுவரத்தன்மை வாய்ந்தவன் மேன்மேலும் ஆத்மாவின் சக்திகளை மலரச் செய்யும் பரிபாக முறை யொன்றுளது—ஆகிய இவ்விஷயங்கள் எல்லா மதங்கட்கும் பொதுவாயுள்ளன. எல்லா மதங்கட்கும் பொதுவான புராணேதிகாசக் கதைகளும் பல உள. இப்படியிருக்கச் சண்டைவர நியாயமேது? ராஜ்ய விவகாரங்களிலோ, செல்வவிருத்திக்கான வியாபார முறைகளிலோ, பௌதிக சாஸ்திரிகளுக்குள்ளேயோ எங்கும் கக்ஷிகள் நிரவிப்போய், எல்லோரும் ஒருமித்து ஸஹோதரபாவம் தழைக்க விருக்கும் இக்காலத்தில், எல்லாவற்றுக்கும் மேலான ஆத்ம உலகத்தில் முரண்பாடு இருக்கலாமா? அப்படி நினைப்போமாயின் முற்றும் தவறேயாம். உலகில் உண்மையான சோதரபாவத்தை நிலைபெறச்செய்யுமுன் எல்லா மதங்களும் ஸாராம்சத்தில் ஒன்றே என்னும் அபேதபுத்தியைக் கைக்கொள்ளல் வேண்டும். இது தான் "மதங்களின் ஸகோதரபாவம்" என்பது.

ஆன சமயம் அது இது நன்றெனும்
மாய மனிதர் மயக்கம் அது ஒழி
கானங் கடந்த கடவுளை நாடுமின்
ஊனங்கடந்த உரு அது வாமே.—திருமந்திரம்.

---

அக்டோபர் 1923 2-ம் வாரம்.

## ஸோதரபாவம் (கல்வி முறையில்.)

"நாம் ஒவ்வொருவரும் ஓர் ஜனஸமுதாயத்தின் அங்கமாக வாழ்ந்து வருகிறோம்; நாம் தனிப்பட நிற்றல் முடியாது; நாம் அனைவரும் ஒருவர்க்கொருவர் வேண்டியவர்களே" என்றுணர்வதால்தான் ஜனஸமுதாயம் சுகம் பெறும். இக்கருத்தோடு மாணவர்களைப் பயிற்றுவிக்கும் கல்வியே கல்வி என்பது டாக்டர் பெஸண்ட் அம்மையவர்களின் கருத்து.

மாணவர்கட்குச் சோதரபாவத்தை உணர்த்துவதே கல்விமுறையின் தாற்பரியம் என்பது இதனால் நன்கு விளங்குகிறது. இக்காலத்தில் படித்தலும் படிப்பித்தலும் வயிற்றுப் பிழைப்பையும் குடும்ப காலக்ஷேபத்தையும் கருதி நிகழ்கின்றனவேயன்றி, மாணவர்கள் சேவாவிகளாகும்போது தம் தலைப் பொறுப்பை உணர்ந்தொழுகச் சாதகமாய் இல்லை. ஆகையால்

வெறும் அறிவை வளர்த்துவிட்டால் மாத்திரம் மாணவர்கட்குக் கல்வி பயிற்றினதாகாது. சுருங்கச்சொல்லில் சுயநன்மையை மட்டும் கருதித் தந்ததவும் இத்தகைய கல்வி அரைகுறையானதே. ஸ்ரீகிருஷ்ணபகவான் பெற்ற கல்வியைப்பற்றி **பாபு பகவான்தாஸர்** சொல்வதாவது :—

“சலிக்காத நிச்சய மநதும், தன் வேலை எதையும் பிரதியுதவியை எதிர்பாராமல் செய்யும் வழக்கமும், பலரைப் பிராணசினேகிதர்களாக்கிக்கொள்ளும் திறமையும் தன் உரிமைகளையும் கடமைகளையும் முறையே அறிந்து அநுஷ்டித்தலும் ஸகலகலைகளிலும் சாஸ்திரங்களிலும் பழக்கமும், நான்கு புருஷார்த்த பலன்களை யெய்தலும் அந்நாட்கல்வியின் நற்பயன்களாய் வழங்கினவென்பது ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய திருஷ்டாந்தத்தால் தெரிகிறது.”

கல்விமுறை எதிலும் மாணவர்களின் சொந்தத் தேர்ச்சி கவனிக்கப்பெறுவது அவசியமே எனினும், பொது ஜனங்கட்காக நாம் செய்யவேண்டிய கடமைகளைப்பற்றி அவர்கட்கு எவ்வளவு எடுத்துரைத்தலும் தகும்.

ஆகையால் ஒவ்வொருவருக்கும் தத்தம் உரிமைகளை மட்டுமின்றி கடமைகளையும் தெரிவித்தலே கல்விமுறையாம். மாணவர்களின் நல்லுணர்ச்சியானது தம்மோடும், தம் குடும்பத்தோடும் மட்டும் நில்லாமல் மேன்மேலும் விசாலிக்கும்படி செய்தல்வேண்டும். அதாவது தம் பள்ளிக்கூடம், நகரம், ஸ்வதேசம் இவைகளையும் கடைசியில் உலகமுழுவதையும் தம் கருத்திற்கொண்டு உரிய கடமைகளை நிறைவேற்றப் பயிற்றல் வேண்டும். மாணவர்கள் எதையும் **பிறர்க்கு** என்று சந்தோஷமாய் அர்ப்பிக்கும்படியான சௌகரிய சந்தர்ப்பங்களில் அவர்களைப் பழக்குவித்தல் வேண்டும். நம்மைச் சூழ்ந்திருக்கும் உலகம் உண்மையிற் பலவாகையால், இப்பலவற்றிலும் உள்ள எல்லா உயிர்களும் ஒன்றென்பதை உணரவும், வேற்றுமையை மறக்கவும் மாணவர்களைப் பயிற்றல் வேண்டும். மாணவர்களுடைய சரீரமும் சீலமும் மனமும் ஆத்மாவும் பயிற்பிக்கப்பெறும் முறைகள் யாவையும் **ஸஹோதரத்துவமென்னும்** முக்கியதத்துவத்தை நன்கறிவுறுத்துமாறு அமைத்தலவசியம்.

அதி வாலிபம் முதற்கொண்டே வீட்டில் தொடங்கி ஸர்வகலாசாலை மட்டும் மாணவர்கள் பெறும் பழக்கம் எப்படியிருத்தல் வேண்டுமெனில், எந்த சந்தர்ப்பங்களிலும் அவர்கள் விவேகிகளாகவும் தம் பொறுப்பு அறிந்தவர்களாகவும் நடக்கவேண்



டும். இவ்வாறு தம் குடும்பத்தில் தொடங்கி மேன்மேலும் பெரிதான ஜனஸமூகங்களோடு ஒற்றுமை பாராட்டி முடிவில் உலகமுழுதோடும் தாம் ஒன்றெனப் பாவிக்கும் தகைமை பெறல் வேண்டும். காலேஜ், ஸர்வகலாசாலைகளின் மாணவர்களுக்கு அவர்களுடைய விளையாட்டுக்களினாலும் சங்கங்களாலும் ஏற்படும் பலவித அவகாசங்களால் இவ்வித விசால புத்தி தானே ஏற்படுகிறது. இந்நாளில் மாணவர்கள் தம்தேசத்தையும் உலகத்தையும் முக்கியமாய் பொறுத்த ராஜகீய முதலிய விவகாரங்களை வர்த்தமானப்பத்திரிகைகளின் மூலமாய் கவனித்துவருதல் எளிது. இதனால் அவர்களுடைய புத்தி விசாலிக்கிறது. ஸ்ரீமான் அருண்டேல் அவர்கள் சொல்கிறபிரகாரம், ராஜகீய விவகாரங்களை ஒருவன், படித்து வருதலால் சுயநலமும் அற்பத்தனங்களும் ஒழிகின்றன: ஜனஸமுதாயத்தில் பலவிதத்திலும் தன் பொறுப்பை உணர்ந்த விவேகியாய் நடந்துகொள்கிறான்.

ஹைஸ்கூல் வகுப்பினர்க்கு விசால புத்தியை வருவிப்பதெவ்வாறு? ஸிவிக்ஸ் பாடம் இதற்கு மிகச் சாதகமாயிருக்கும். ஸர்க்கார் இலாகாக்களையும் அவைகளின் தொழில்களையும் பற்றி பிள்ளைகட்குப் படிப்பித்தால் அதையே ஸிவிக்ஸ் கற்பித்துத் தீர்ந்ததென இந்நாட்டில் எண்ணுகிறார்கள். ஆனால் வழியறிந்து செய்யும் முயற்சிகளால் தான் சாதகமுண்டென்பதையும், நாமே தேர்ந்தெடுக்கும் அதிகாரிகளுக்கும் தலைவர்களுக்கும் நாம் அடங்கிநடப்பதோடு சமயோசிதமாக சுயபுத்தியையும் விவேகத்தையும் கையாண்டால் தான் நற்பயன் அடையலாமென்பதையும் மாணவர்கட்கறிவுறுத்தலவசியம். பகலில் அவகாசமில்லாத ஏழைகட்கு இராப் பள்ளிக்கூடங்களையும், ஒற்றர் சங்கங்களையும், மாணவர்களைக் கொண்டே ஏற்படுத்தச்செய்து ஆரம்பசிகிச்சை முறைகளையும் கற்பித்து, உபாத்தியாயமார்கள் தம் சீடர்களை உற்சவாதிகாலங்களில் ஏழைகளுக்கும் அநாதைகளுக்கும் கிழவர்களுக்கும் அவசியங்கண்டு உபகரித்து வரப்பயிற்றுவார்களேயானால், உழைப்பின் மேன்மையையும், சோம்பலின் இழிவையும் மாணவர்கள் இனிதுணர்வார்கள். இவற்றால் மாணவர்கள் பிற்காலத்தில் நல்ல லோகோபகாரிகளாகவும் ஸ்வதேச ஸேவகர்களாகவும் முன்வருவார்கள்.

பள்ளிக்கூடப் படிப்பில் மதபோதனை அவசியமென்பது சொல்லாமலே விளங்குமெனினும், இதற்குள்ள இடையூறொன்று

ளது. ஒவ்வொருமதத்திலும் அற்பபேதங்களையுடைய அநேக வகுப்பார்கள் உளர். துரபிமானம் ஏறினவர்கள் இவ்வற்பமானவைகளையே முக்கிய உண்மைகளெனப் பிரமாதப்படுத்துகின்றனர். தன் மதத்தில் குருட்டுப்பிடிவாதமும் பிறமதங்களில் துவேஷமும் உடையவனை ஆசானாகவைத்து மதபோதனை செய்வித்தல் தகாது. முடிவில் எல்லாமதங்களும் ஒன்றென ஒற்றுமையை விளக்கிக் காட்டுவதே உண்மையான மதபோதனையாகும், இதனால் மதத்தின் ஸாராம்சம் இன்னதென்றும், அதிற் புகுந்திருக்கும் மூடாசாரம் இன்னதென்றும் மாணவர்கள் எளிதில் பகுத்தறிவார்கள். ஏனெனில் ஒற்றுமையை விருத்திசெய்யும் சாரமான அம்சங்களை விவகரிக்கும்போது வேற்றுமையை விருத்திசெய்யும் சாரமற்றசக்கைகளுக்கிடமேது?

மதபோதனை பெற்றவன் தன் மதத்தைக் கருதியே தன் சரீரத்தைத் தேற்றிக் கொள்வான். எப்படியெனில், மனித குலத்தின் நலங்கருதி உழைப்பதையே ஈசுவர கைங்கரியமாகக் கருதும் தற்காலத்தில் ஜரையையும், வியாதியையும் அண்டவொட்டாமல் சரீரத்தைப் பயிற்றிக் கொள்ளுதலும் மத ஸம்மதமான கடமையென்றுணர்வான். தனியே யமர்ந்து விளையாடும் ஆட்டங்களைவிடக் கூட்டமாய்க் கலந்து ஆடும் விளையாட்டுக்கள் சிலாக்கியமானவை. ஏனெனில், இவற்றால் நானென்ற வேற்றுமை யொழிகிறது. நாமென்ற ஒற்றுமை விளைகிறது. சேர்ந்துழைப்பதின் பிரயோசனம் விளங்குகிறது.

ஆகையால் மாணவர்களின் கல்விப் பருவம் முழுவதிலும் அவர்களுடைய சொந்த அபிவிருத்தி யாவும் ஜனஸமுதாயத்தின் பொது நலத்தைக் கருதியே கவனிக்கப்பெறுதல் வேண்டும். தாமஸ் ஹென்ரீ ஹக்ஸ்லீ என்பார் கூறுவது பின்வருமாறு:—

“எவனொருவனுக்குத் தன் சரீரம் தடையின்றி வசப்பட்ட இயந்திரம்போல் தன் தொழில் யாவற்றையும் சுககரமாயும் ஆனந்தகரமாயும் இயற்றுமோ, எவனுடைய விவேகமானது தெள்ளிய தர்க்க முறையில் சோர்வுறாமல் இயங்குவதோடு அதிநுட்பமும் மிகப்பெரிதுமான எவ்வித காரியங்களையும், சாமர்த்தியமாய்க் கற்பித்து நடத்தும் யந்திரமாக இருக்குமோ, எவனுடைய மனத்தில் பிரகிருதியின் பரமார்த்த உண்மைகளையும் அவற்றின் தொழில் முறைகளையும் பற்றிய



அறிவு நிறைந்து விளங்குமோ, எவனொருவன் காயக்கிலேசம் பண்ணும் தபஸ்வியல்லாமல், வீரியவானாகவும் தேஜஸ்வீயாகவுமிருந்து, காமனாவுணர்ச்சிகள் யாவற்றையும் அறச்செய்து பிறர்க்குபகரிக்கச் சித்தமாயிருக்கும்படி அப்பியசித்து பிறரெவரையும் தன்னைப்போல் நன்கு மதிப்பானோ, அவனே உதாரமான கல்வியாளனெனக் கருதுகிறேன்”

“ஜனஸமுதாயம் என்பது என்ன? அநேகருடைய கூட்டம். ஆனால் அனைவரும் ஒருவரையொருவர் அடுத்தே வாழவேண்டியிருக்கிறது. ஆகையால் அதில் ஒவ்வொருவருக்கும் உரிய இடம் பொருள் ஏவல் உள்ளன. ஒவ்வொருவரும் தத்தம் கடமையை நேர்மையாய்ச் செய்வதற்கேற்றபடியே ஜனஸமுதாயம் க்ஷேமமடையும். ஆகையால் அது பால்யந் தொடங்கி மாணவர்கள் தம் தேசதர்மத்தையும் கடமைகளையும் அறிந்து ஸ்வதேச அபிமான முள்ளவர்களாகத் தம் தேசத்தாரனைவரையும் தம் நெருங்கின சுற்றமாகப் பாவித்துழைக்கும்படி பயிற்சிபெறல் வேண்டும். முதன் முதல் பெற்றோர்கட்கும், சோதர சோதரிகட்கும், நம் இளமையில் நம்மை எடுத்து வளர்த்த வீட்டுவேலைக்காரர்கட்கும் நாம் செய்ய வேண்டிய கடமைகள் உண்டு. கடமைகள் யாவும் தீர்க்கவேண்டிய கடன்களேயாம். ஏனெனில் நாம் இன்றுவரை சுகமாய் வாழ்வது அவர்களுடைய போஷணை, ஆதரவுகளாலேயாம் என்பதை மாணவர்கட்கு விளங்கவைத்தல் வேண்டும். நம் எண்ணங்களும் உணர்ச்சிகளும், காரியங்களும் எவ்வாறு நம்மைச் சூழ்ந்திருப்போரைத் தாக்கிப் பிறகு நம்மையும் தொடருகின்றன வென்பதை விளக்கிக் காட்டி மாணவர்களுக்கு அவர்களுடைய உத்தரவாதத்தை உணர்த்துதல் வேண்டும். இத்தத்துவங்களையெல்லாம் சிசுக்களுக்கு வாய்மொழியாய்ப் போதித்தல் உதவாது. பெற்றோர்களும் உபாத்தியாயர்களும் இக்கருத்துக்களின்படி நடப்பரேயானால் குழந்தைகளுக்கு அறிவைப் புகட்டுவதோடு, அதை தம் நன் மாதிரியாலும் வீரியம் பெறச்செய்யலாம்.”

—(டாக்டர் பெஸண்ட்.)

---

அக்டோபர் 1923 3-ம் வாரம்.

சகோதரபாவம் (குற்றவாளிகளிடத்தில்)

“எவன் ஒருவன் மிகுந்த தீயொழுக்க [illegible] யே [illegible] வேறொன்றை அடைக்கலமாக அடை[illegible] என்னைத்

210792

தொழுகின்றானோ, அவனை நல்லவனாகவே நினைக்கவேண்டும். ஏனெனில் அவன் நல்ல நிச்சயத்தை உடையவன்.”

பகவத்கீதை 9-30

ஓர் ஜனஸமுதாயத்தில் பெரும்பான்மையோர் நாம் ஸாதாரணமாய் ‘நல்லவர்கள்’ என்று சொல்லத்தக்கவர்களேயாவர். இவர்கட்கு மேற்பட்ட படியில் ஒரு வகுப்பாரும், கீழ்ப்படியில் ஒரு வகுப்பாரும் ஆக மூன்று வகுப்புக்களை எந்த ஜன ஸமூஹத்திலும் காணலாம். இவற்றுள் மேல் வகுப்பினர் செய்வதென்னவெனில் முக்கியமாய் வருங்காலத்தை எதிர் நோக்கி அதற்குரிய தர்மங்களையும் கல்வியறிவு ஒழுக்கங்களையும் எடுத்துரைத்து அநுஷ்டித்துக் காட்டுவர். கடைவகுப்பினரை நோக்குங்கால் அவர்கள் நீதி வழியறியாதவர்களாயுளர். எத்தேசத்து ஜநஸமுதாயத்திலும் இம்மூன்று வகுப்புக்களும் ஒருங்கே வாழவேண்டியிருக்கின்றன. ஓர் தேசத்தாருள் முதல் இடை கடைவகுப்பினர்களுள் எவ்வளவு பேதங்களிருப்பினும், இவர்களெல்லோருக்கும் பொதுவாய் தேசதர்மத்தை யொட்டிய சில குணங்கள் உண்டு. ஒரே தேசத்தார்க்குள்ளும், ஒரே ஜாதியர்க்குள்ளும், ஒரே பாஷை பேசுவோர்க்குள்ளும் இவ்வபிமான ரூபமாயுள்ள ஒற்றுமையை விருத்திசெய்வதற்கே “சட்டம்” என்பது எற்பட்டிருக்கிறது.

எத்தேசத்தாராவது சட்டம் வேண்டியதில்லை எனத்தள்ளுபடி செய்ய ஆரம்பிக்குமுன், அவர்களில் ஒவ்வொருவரும் இப்பிறவியிலேனும் முற்பிறவிகளிலேனும் சட்டத்துககுக் கட்டுப்பட்டு நடந்து தேறியிருக்கவேண்டும். நீதி வழியறியாச் சனங்கள் பொறுப்புணராமற் செய்யும் காரியத்தாலும் சாமானியமாய் நல்லவர்கள் எனப்படுவோரும், நேர்வழியில் யோக்கியர்களாகவும் ஸத்தியவான்களாகவும் இருக்கையிலேயே பழைய துர்வாஸனையால் வழிதவறுவதனாலும் குற்றங்கள் நேருகின்றன. இவ்வாறாக நியாயத்தை மீறுவோர்களை அடக்குதல், ஜனஸமூகத்தின் தற்காப்பையும் பொது நன்மையையும் கருதி, கண்டிப்பாய் வேண்டியது தான், இவ்வாறான அடக்குமுறையே தண்டனை யெனப்படுகிறதென்றும் அது அவசியந்தானென்றும் தத்துவஞானிகளெல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள்.

அதிகாரிகள் தண்டிக்கும் போது ஜன ஸமுதாயத்தின் பொது நலம் ஒன்று மட்டுமே கருத்திலிருந்தால் நல்லது. ஆனால் பொதுவாய் அது தான் கிடையாது; வெகுவாய் அவர்கள் முக்கியமாய் மூன்று விதமான வெவ்வேறு சித்த விர்த்தியால் தூண்டப்பட்டு தண்டனை விதிக்கிறார்கள்.



1. முதலாவது, பழிக்குப் பழிவாங்கல் வேண்டும் என்ற ஆத்திரம். காக்கன் மூக்கனை அடித்தான். ஆகையால் எவ்வாறாயினும் காக்கனை வருத்திப் பார்ப்பது மூக்கனுக்கு திருப்தி. இக்காலத்துப் பெரும்பான்மையான வழக்குகள் உலகத்தில் தருமமும் நீதியும் தலையெடுக்கவேண்டும் என்ற கருத்தோடு வருவன அல்ல. பின்னை தீங்கிழைத்தவன் தண்டிககப்படுவதைக் கண்குளிரப் பார்க்கவேண்டுமென்ற துவேஷபுத்தியாலேயே வாதாடுவதும் அதன்பயனாய்த் தண்டனையைக் அநாவசியமாய்க் கடுமையாய் விதிக்கச் செய்வதும் வழக்கமாய் நடைபெறுகின்றன.

2. இரண்டாவது, ஜனஸமுதாயத்தில் காக்கனும் காக்கனைப் போன்றவர்களும் மூக்கனுக்கும் மூக்கனைப் போன்றவர்கட்கும் அம்மாதிரி தீங்கிழைக்கத் தொடங்கினால் என்ன செய்வதென்ற பயம். அதனால் அக்குற்றவாளியை மேன்மேலும் கையோங்கவிடாமலும் அவனைப் போலொத்தவர்களுக்கு ஒரு எச்சரிக்கையாகவும் அவனை சரியாய்த் தண்டித்தல் வேண்டுமென்பது ஒரு கக்ஷி. ஆனால் சயில் கணக்குக்களைப் பார்ப்போர்களுக்கு, இதனால் குற்றங்கள் ஜனஸமுதாயத்தில் ஒழிகின்றனவல்ல வென்பது எளிதில் விளங்கும். எப்படி யெனில், ஒரு தரம் அடைபட்ட கைதிகளே விடுதலையானதும் முன்னிலும் கோரமான குற்றங்களைப் புரிந்து மறுபடியும் சீக்கிரத்திலேயே சிறைச் சாலைக்கு வந்து சேருகிறார்கள். தண்டனை எவ்வளவுக்கெவ்வளவு கடுமையாய் விதிக்கப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு குற்றங்கள் அதிகமாகின்றன வென்பதும் அவர்கள் குற்றஞ்செய்யாதொழிய இவ்வித தண்டனைகள் ஒருவிதத்திலும் சாதகமில்லை யென்பதும் அநுபவஸித்தம்.

3. மூன்றாவது, முற்பிறவிகளின் ஸ்வகர்மத்தால் இப்பிறவியில் கிடைத்ததன் இஷ்டமித்திர பந்துக்களோடிருந்து சுகம் பெறமாட்டாமல் தன்னைத் தானே கெடுத்துக்கொள்ளும் குற்றவாளியின் கெட்ட சுபாவத்தைத் திருத்துவதற்குத் தண்டனை அவசியம் எனினும், இவ்வகையிலும் இக்காலத்திய சிக்ஷாமுறைகள் முழுதும் பயனற்றவையென்பது சொல்லாமலே விளங்கும். ஆகையால் கடுங்காவல், வம்படி யடித்தல், தனியே சிறையிலடைத்தல் இவ்வாறான தண்டனைகளைத் தவிர வேறேதாவது முறைகள் தேவை.

4. இத்தண்டனைகளுக்குப் பாத்திரமான சில குற்றவாளிகள் இருப்பினும் அவர்களைச் சும்மா விட்டு, வருங்காலத்திய இலக்ஷி

யங்களை எடுத்துரைக்கும் ருஷிதுல்யர்களை அவர்கள் மகிமையையறிந்து கொள்ள மாட்டாமற் பிடித்து வதைத்தல் அதிகாரத்தின் போக்காக இருக்கிறது.

இக்காரணங்களை உத்தேசித்து மேற்கூறிய தண்டனை முறைகள் இனிவுதவா.

நீதிவழி அறியாமையால் தப்பிதம் செய்கிறவனைத் திருத்துவதற்கு மட்டும் ஏற்ற தண்டனை அவசியம் தான். மற்றப்படி அவசியமில்லை.

வெகுகாலமாய்ப் பள்ளிக்கூடங்களில் குழந்தைகளைப் பிரம்பு கொண்டு பயமுறுத்திவந்த உபாத்தியாயர்கள் தண்ட பிரயோகத்தாற் பயனில்லையென்று கண்டு கொண்டார்கள். அவ்வாறே சிறைச்சாலையிலும் தண்டபிரயோகத்தாற் பயனில்லை என்பது தான் இப்போது நாமறியவேண்டிய உண்மை. ஏனெனில் சிறைச் சாலைக் கைதிகளிற் பெரும் பான்மையோர் பரிபக்குவமுறையில் தேறாத குழந்தைகளேயாவர். அவர்களுடைய மனத்தையும், காமனைகளையும், சரீரத்தையும் பண்படுத்திப் பயிற்பிக்கும் சாதனங்களை அமைத்தல் தான் வேண்டும். "குற்றவாளிகளுக்குச் சோறும். துணியாம், விசிராந்தியாம், அந்தஸ்தான வேலைகளாம். ஸங்கீதமாம்! நன்றாயிருக்கிறது! நல்லசிறைச்சாலை ஐயா இப்படிப்பட்டது!" என்று பலவாறாகப் பழைய சம்பிரதாயக்காரர்கள் பரிகசிப்பார்கள். ஜனஸமுதாயத்தைப் பாதுகாக்கும் பொருட்டு இவர்களை பந்தோபஸ்தில் வைக்கவேண்டியது நியாயந்தான். மனித சுபாவம் எப்படி உளதெனில் ஒரு வகையில் நிர்ப்பந்தம் ஏற்பட்டால் மற்ற வகையில் வளர்ச்சியும் சாத்தியமாம். எப்படியாயினும் இவ்வித பந்தோபஸ்துக்கும் குரூரமான தண்டனைக்கும் பேதமில்லையா?

குற்றவாளிகளும் நம் சோதரர்களே என்பதை நாம் உணர்ந்து சட்டசபைகளில் உள்ள நம் பிரதிநிதிகளையும் உணரச் செய்து, சகோதரபாவத்தை மறவாமல் சட்டங்களை திட்டப்படுத்தவோ சீர்திருத்தவோ முயலுவோமாயின் நாம் நாகரிகத்தில் எவ்வளவோ அபிவிருத்தியடைந்தவர்களாவோம்.

"நீ பாவஞ் செய்தோர் எல்லோரையும் பார்க்கிலும் அதிக பாவஞ்செய்தவனானாலும் ஞானமாகிய தெப்பத்தினாலேயே ஸகலபாபங்களையும் கடந்திடுவாய்."—பகவத்கீதை 4-36.

"யோகத்தைக் கூடிய மனத்தினனாய் எங்கும் ஒரே பார்வையையுடையவன் ஸகல பூதங்களிலுமுள்ள ஆத்மாவையும் ஆத்மாவிடத்துள்ள ஸகல பூதங்களையும் காண்கிறான்."—பகவத் கீதை 6-29.



## அக்டோபர் 1923 4-ம் வாரம்

## ஸஹோதரபாவம் (பற்பலதேசத்தார்க்குள்)

"'இது என்னது மற்றவருடையது' என்று எண்ணுவோர்கள் அல்பபுத்தியுடையவர்களே. உதாரமான நடத்தையுள்ளவர்களுக்கு பூமிமுழுதுமே ஓர் சிறு குடும்பம் போலவாம்."—மநு.

முற்காலங்களில் நானாதேசத்தார்கள் பட்ட போராட்டங்களைச் சரித்திர வாயிலாகப்படித்தவர்கள் யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயம் ஒன்றுண்டு. அதாவது நியாயமாய் இனிச் சகோதரமுறையில் தான் பற்பல தேசத்தார்களும் வாழவேண்டும் என்பதாம். ஆனால் தத்துவமுறையில் ஒருவன் இக்காலத்திய மனிதகோடிகளைக் கவனிக்குமளவில், உயர்ந்த சில அநுஷ்டானங்களை தம் சொந்த ஆசரணைகளில் கைப்பற்றிவருவோரும் தம் தேசகாரியங்களைக் கவனிக்க நேரும் போது ராஜ்ய நீதியை மேன்மைபெறச் செய்வது போக, ராஜ்ய தந்திரமென்றும், ராஜ்யச் செலவுக்கின்றியமையாததென்றும் இவை போன்ற போலிக்காரணங்கள் காட்டி இழிவுறுகிறார்கள். எவ்வித ஸத்தியத்தாலும் தர்மாநுஷ்டானததாலும் நம் பிரத்யேக வாழ்க்கையில் சிறப்படைகிறோமோ, அதே ஸத்தியத்தையும் தர்மத்தையும் நம் தேசிய வாழ்க்கையிற் கைக்கொள்கிறோமில்லை. நாகரிகமும் சீலமும் சிறப்பும் வாய்க்கப்பெறாத ஆதிகாலத்து மனிதர் ஒருவர்க்கொருவர் எவ்வாறு நடந்து கொண்டார்களோ, அவ்வாறான அநாகரிக தசையில் தான் பற்பல தேசத்தார்கள் இதர தேசத்தார்களோடு இப்போது பொருதுகிறார்கள். "நல்லது கருதிக் கெட்ட உபாயங்களையும் செய்யலாம்" என்ற கொள்கையின் மேல் மத்திய காலத்து ராஜதந்திரிகள் தம் தேச நன்மைக்காக முயன்றனர். இன்னும் இக்கொள்கையில் தான் பலருக்கு மனப்பூர்வமான பிடித்தம் உள்ளதெனினும், ஜனஸமுதாய விவகாரங்கள் நிகழ்ந்துவரும் நூதனப் போக்கைக் கவனிக்கத், தம் கொள்கையை வெளியில் வாய் விட்டுச் சொல்லிக் கொள்ளத் தயங்குகிறார்கள். ஸ்வதேசாபிமானம் என்ற ஓர் நற்குணத்தைக் காப்பாற்ற முயன்று மற்ற நற்குணங்களைக் கைவிடுகிறார்கள். பொய் சொல்வது பாபம், ஆனால் ராஜ்யதந்திரத்தில் சாமர்த்தியமாய்ப் பொய் சொல்லத் தெரிவது ஓர் உத்தம குணமாம். திருடுவது பாபம். ஆனால் ராஜ்யத்தின் செல்வச் செருக்கை அதிகரிக்கப் பலவிதத்திலும் பணம் சொரண்டுவதும் தொழிற்சாலைகளை ஏற்படுத்திப் பெருந்தனத்தை கொள்ளையாக லாபம் பெறுவ

தும் தேசாபிமானமாம். கொலை செய்வது பாபம். ஆயிரக் கணக்கானவர்களை யுத்தத்தில் ஒரே யடியாய்க் கொல்வதற்கேற்ற பைசாச யந்திரங்களை நாளுக்கு நாள் அதிகமாகக் கண்டுபிடித்து விருத்தி செய்தல் தேச நன்மையாம். நாம் தோஷமெனக் கருதுபவைகளையே தேசத்திற்காகச் செய்தால் அவை தோஷமின்றாம். ராஜ நீதியானது இன்னும் கீழ்ப்பட்ட நிலையிலேயே உள்ளதென்பதற்கு இவ்வுண்மையே காரணம்.

ஆனால் உற்று நோக்குமிடத்து, நாகரிகமானது இவ்வகையிலும் சிறப்புற்றிருக்கிறது என்பது விளங்கும், எப்படியெனில் மேற்கூறியவாறு யுத்தங்கள் மிகக் கொடுமையாயு மிருகப்பிராயமாயும் நடக்கின்றனவாயினும், சண்டையிற் கலக்காத தேசத்தார்களினிமித்தம் வேறுசில விஷயங்கள் யோசனையோடும் நிதான புத்தியோடும் நிகழ்கின்றனவென்பதும் உண்மையே. மஹாராஜ்யங்கள் விசாலித்து விளங்குவதில் பற்பல ஜனஸமூகங்களுக்குள் அந்யோந்யபாவமும் ஒற்றுமையும் ஏற்படக் காரணமுள்ளது. ஓர் தேசத்திற்கும் மற்றொரு தூரதேசத்திற்கும் பற்று வரவு கணக்கில் வியாபாரங்கள் நிகழ்வதும், நாநா தேசத்தார்கள் பொதுப் பாங்கிகளின் மூலம் பணங்காசுகளைக் கொடுக்கல் வாங்கல் செய்தலும், அப்படியே தபால் ஏற்பாடுகளும், கப்பற் போக்குவரத்தும், பற்பல தேசங்களிலும் முதல் போட்டு வியாபாரம் செய்வதும், இவ்வாறான பற்பல விதமான உறவுகளால், இனியுத்தங்கள் நிச்சயம் குறையவேண்டியவைதான். இத்தனைவிதமான நெருங்கின சம்பந்தங்கள் இல்லாவிடில் இன்னும் அதிகமானயுத்தங்கள் நடந்திருக்கும் என்பதில் தடையில்லை. இவற்றால் ஸர்வதேசங்களுக்கும் பொதுவான சட்டங்கள் எத்தனையோ பிறந்திருக்கின்றன. அவைகளால் பற்பலதேசத்தார்கள் தங்கள் பரஸ்பரமுறைமைகளில் ஒழுக்கந்தவறாதிருக்கவும், சண்டைக் காலங்களிலும் யுத்தத்தின் கொடுமைகளை ஒருவாறு குறைக்கவும் ஏற்பாடுளது.

பற்பல தேசத்தார்க்குள் இவ்வாறு உயர்தரமான ஒற்றுமை வழிகள் நிலைபெற்றுவர, மற்றொரு பக்கம் ஒரு தேசத்தார் மற்றொரு தேசத்தாரைச் சமயம் வந்தால் அடியோடழிக்கும்படியான கோரமான யந்திரங்களும் கண்டு பிடிக்கப்படுகின்றன. இவ்விரண்டும் இருப்பதால் யுத்தமே நேராதென்றிருப்பதற்கு இடமில்லை. எனினும் சடிதியில் இல்லாமல் காலதாமஸமாய் ஏற்படுவதற்கு ஓர் அவகாசமுள்ளது, அதற்குள்



சமாதான வழிகளில் இணங்கினாலும் இணங்கலாம். இவ்விருவகைகளிலும் அபிவிருத்தியாகி வருவதைக் கூர்ந்த அறிவாளிகள் ஸர்வ தேசங்களும் சோதரபாவத்தை எய்துவதற்கு ஸூசகமென்றே கூறுகிறார்கள். ஸர்வதேசங்களிலும் வாலிபர் எனத்தகும் அமெரிக்கர்களும் அவர்கள் தலைவரான உட்ரோ வில்ஸன் என்பவரும் ஏகோபித்து முன் அநுபவத்தால் பெறவேண்டிய ஞானத்தை எல்லோருக்கும் எடுத்துக்காட்டி இக் கருத்தைப் பலிக்கச்செய்வதற்காகவே ஸர்வ தேசிய ஐக்கிய ஸங்கத்தை ஸ்தாபித்தார்கள். மற்ற ராஜ்யங்களின் உளவைத் தந்திரமாயறிதலாலும், பெருஞ் சைனியத்தைச் சேர்த்துக் கொழுக்கச் செய்வதாலும் நாநா தேசத்தார்களும் வருந்திக்கிடந்த சரியான தருணத்தில் இவைகளைக் கண்டித்து ஸர்வதேச ஐக்கிய ஸங்கம் ஒன்று ஸ்தாபித்தல் வேண்டுமென்றது ஸர்வஜனங்களுக்கும் தங்கள் தங்கள் மநோபீஷ்டம் நிறைவேறியதாகத் திருப்தியை உண்டாக்கிற்று. அப்படியே இம்மஹாசங்கம் சீக்கிரம் ஏற்பாடாயிற்று.

ஆனால் ராஜ்யநீதி என்பது தானாகவே தனித் தோங்கி உயரப் பறத்தல் அசாத்தியம். ஓர் ராஜ்யத்தின் பெருமை சிறுமையானது அதிலுள்ள ஸர்வ ஜனங்களும் தத்தம் வாழ்நாள் முறையில் தத்தம் பற்பல சுபாவங்களையும் சக்திகளையும் எப்படிச் சாதகபாதகமாய் உபயோகிக்கிறார்களென்பதைப் பொறுத்தது. உதாரணமாக நம் ஒவ்வொருவருக்கும் சரீரமும், வாக்கும், மநஸ்ஸும், காமனைகளும் உள்ளன. இவ்வெல்லாவற்றையும் சரியாய் அடக்கிக் கொண்டு போதலால் தான் காரியம் முடியும். ஸர்வதேச ஐக்கிய சங்கம் சித்தி பெற வேண்டுமானால், அதாவது ஸகோதரபாவம் ஸர்வதேசத்தார்களுள்ளும் பரஸ்பரம் நிகழ வேண்டுவோமாயின், நமொவ்வொருவரும் சும்மாயிருக்கலாம், ஸங்கம் எல்லாம செய்யுமென்றிருத்தல் உதவாது. அந்த சங்கத்தின் கருத்தை நிறைவேற்ற ஒவ்வொருவரும் கைக்கொண்டு முயன்றலின்றி ஸங்கம் தானே யொன்றும் செய்தல் முடியாது

ஸ்வதேசாபிமானத்தைப்பற்றிய தவறான அபிப்பிராயங்களே இதற்குப் பெரிய இடையூறுகள். உண்மையில் ஸ்வதேசாபிமானம் என்பது தன் சொந்த நாட்டில் அன்பு பூண்டொழுகுதல். உலகில் உயிர் தரித்து வாழுவதில் போராட்டம் அவசியம்; அதில் மிஞ்சுகிறவர்கள் தான் பிழைத்திருப்பதற்குரியவர்கள் என்ற ஜீவசாஸ்திர தத்துவமொன்றை

விபரீதமாய்ப் பலர் உணர்ந்து அதன் பயனாகப் பரஹிம்ஸை இல்லாமல் வாழல் முடியாதென்ற எண்ணம் நிலைபெற்றது. அதனால் ஸ்வதேசாபிமானம் என்பதற்கும் பிறதேசங்களைச் சந்தேகித்து துவேஷித்தல் என்பதாகப் பொருள் கொள்ளப் பட்டது. தேச சரித்திரத்தைப் படித்தலிலும் படிப்பித்தலிலும் இக்குறைபாட்டை யொழித்து, தேசந்தோறும் உதித்திருக்கும் அரிய பெரிய தலைவர்களின் குணாதிசயங்களையும் புத்தி சாமர்த்தியத்தையும் கற்றும் கற்பித்தும், அவர்களால் தம் தேசம் மட்டுமின்றி உலகமுழுதுமே எல்லாத் தேசங்களும் எவ்வாறு நலம்பெற்றிருக்கின்றன வென்பதை விளக்கமுறச் செய்தல் வேண்டும். அப்போது தான் தேசங்களுக்குள் பரஸ்பரம் உண்மையான சிநேகமும் நெருங்கிய கட்டுப்பாடும் அமைவுறும். உலகெங்கும் பெரிய நகரங்களிலும் சிறு கிராமங்களிலும் ஸர்வதேச ஐக்கிய சங்கங்கள் போன்ற கிளைச் சபைகள் இருத்தல் வேண்டும். தேசங்களுக்குள் பரஸ்பரம் சோதரபாவத்தை நிலைபெறச் செய்தல் இவ்வாறு சாத்தியம். ஒவ்வொரு தேசத்தவர்களும் மற்ற தேசத்தவர்களுக்குச் சோதரர்களே என்றுணர்வோமாயின், ஒரோர் தேசத்திற்கிடைக்கும் தத்துவங்களை அதற்குரிய விசேஷக் கருத்துப்படி யதார்த்தமாய்க் கொள்வோம். அப்போது பற்பல தேசத்தார்களும் தங்கள் தங்கள் முறையில் ஈசனை நாடி வழிபடுகிறார்கள் என்பது விளங்கும். அவ்வளவுக் கவ்வளவு மனிதகுலம் நலம் பெறும்.

“மனிதர்கள் சுபாவத்தை ஒழுங்குபடுத்தியும், காரிய முறைகளை ஒழுங்கு படுத்தாமலிருப்பதிற் பயனுண்டோ? காரிய முறைகளை ஒழுங்கு பெறச் செய்து மனிதர்களுடைய சுபாவம் ஒழுங்கு பெறாமலிருப்பதில் தான் பயனுண்டோ? ஸர்வஜனங்களும் ஸர்வபிரவர்த்திகளுள்ளும் ஆழ்ந்திருக்கும் மூலதத்துவத்தைக் கண்டு அதை ஒழுங்கு பெறமாற்ற வேண்டும். இரண்டு விதமாயும் மாறுதல் அவசியம். எத்தேசமும் தன் ஆத்மாவைத் தானறிந்து சீர்பெறவேண்டும். எல்லோரிடத்தும் இவ்வாறான ஓர் புதிய உணர்வும் புதிய உலகமும் அவரவர் பிரஜ்ஞையில் தோன்றல் வேண்டும்.

* * *

ஓர் தேசம் எனில், அத்தேசத்தின் பூமி அல்ல. ஆனால் தேசத்தாராகிய ஸ்திரீபுமான்களேயாவர். அவர்களே அபிவிருத்தி அடைதல் வேண்டும். அவர்கள் எண்ணிக்கையில் அதிகப்படவேண்டும் என்பதல்ல. அவர்களுடைய யோக்கியதையும் சிறப்புந் தான் அதிகரித்தல் வேண்டும். எல்லையாற் குறுகியோ விரிந்தோ இருப்பதற்கேற்றபடி ஓர் தேசம் சிறியது பெரியதாகாது. பின்னை எத்தேசத்தில் மனிதர்கள் உயர்வான கல்வியறிவொழுக்கத் தேர்ச்சியுள்ளவர்களாயிருக்கிறார்களோ அத்தேசமே பெரியதாம்.”

பால் ரிஷோ.



---

## ஜீவனும் ஜீவனுடைய உபாதிகளும்

பகவத்கீதை 15வது அத்தியாயம் 7வது சுலோகத்தில் ஸ்ரீகிருஷ்ணபகவானால் சொல்லப்படுகிறதாவது:—“என்னுடைய அம்சமாகவும் நித்தியனாகவுமிருக்கிற ஜீவனானவன் மாயையில் அடங்கியிருக்கிறதும் மனதை ஆறாவதாகவுடையதுமான இந்திரியங்களை சமுசாரத்திலே (போகார்த்தமாக) இழுக்கிறான்.” இதில் ஜீவனானவன் ஈசுவரனுடைய அம்சம் என்று தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. அம்சம் என்றால் பங்கு, பாகம் என்று கொள்ளலாம். அதாவது ஜீவன் ஈசுவரனை விட அந்நியனல்லன். ஆனால் உபாதிபேதத்தால் வேறாகக்காணப்படுகிறான். ஜீவனுடைய உபாதி என்ன? ஈசவரனுடைய உபாதி என்ன? ஈசுவரனுடைய உபாதி சுத்தஸத்துவ மாயை என்று சொல்லப்படும். இந்த விஷயத்தை விசாரிக்க இந்த வியாஸம் துவக்கப்படவில்லையாதலால் ஜீவனுடைய உபாதிகளைப்பற்றி மாத்திரம் விசாரிப்போம்.

2 இந்த சுலோகத்தில் “ஜீவனானவன் மாயையில் அடங்கியிருக்கிற மனது முதலிய ஆறு இந்திரியங்களை (போகார்த்தமாக) சமுசாரத்திலே இழுக்கிறான்” என்று கூறப்பட்டிருக்கிறது. ஆறு இந்திரியங்கள் எவை? மெய், வாய், கண் மூக்கு, செவி, மனது ஆக ஆறும் ஞானேந்திரியங்களாக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த ஆறு இந்திரியங்களுக்கும் மூலஸ்தானம் மனோமயகோசம். “சமுசாரத்திலே (போகார்த்தமாக) இழுக்கிறான்” என்பதனால், கர்ம பூமியில் ஜீவன் பிரவர்த்திக்கிறான் என்று ஏற்படுகிறது. கர்மபூமியில் கர்மங்களைச் செய்யவும் போகங்களை அநுபவிக்கவும் ஸ்தூல சரீரம் ஏற்படுகிறது என்பது விளங்கும். இதற்கு பிராணாதாரமாக பிராணமய கோசம் ஏற்படுகிறது. ஆகையால் ஜீவன்

போகார்த்தமாக அந்நமய பிராணமய கோசங்கள்சேர்ந்த ஸ்தூலசரீரத்தையும், மனோமயகோசத்தையும் அடைகிறான். முன்னது பூலோகப் பிரகிருதியாலேற்பட்டதென்பது யாவர்க்கும் தெரிந்ததே. பின்னதாகிய மனோமய கோசம் இருவகையாகும். மனது என்ற ஸுவர்லோக தத்துவத்தைக்கொண்டே செய்யப்பட்ட கோசம் ஒன்று, மற்றொன்று மெய், வாய், கண், மூக்கு, செவி ஆக இந்த ஐந்து ஞானேந்திரியங்களுக்கும் உண்மையில் ஆதாரமாயுள்ள "புவர்" லோகப் பிரகிருதியால் அமைக்கப்பட்ட கோசம். இந்த மூன்று கோசங்களும் போகார்த்தமாக ஜீவனுக்கு ஏற்பட்ட சரீரங்களாம்.

3. போகார்த்தமாக ஏற்பட்ட இந்தச் சரீரங்களைத் தவிர ஜீவனுக்கு வேறு சில கோசங்களும் உண்டு. இவைகள் விஜ்ஞானமயகோசம் என்றும் ஆநந்தமயகோசம் என்றும் சொல்லப்படுகின்றன. விஜ்ஞானமய கோசம் மஹர்லோகப் பிரகிருதியாலும் ஆநந்தமய கோசம் ஜனோலோகம், தபோலோகம், ஸத்தியலோகம் ஆகிய மூன்று லோகங்களின் பிரகிருதிகளாலும் அமைக்கப்பெற்றது. இந்த இரண்டு கோசங்களுங்கூட மாயையில் அடங்கியிருக்கிற பிரகிருதியால் ஏற்பட்டவையேயாகும்.

4. எல்லா சரீரங்களிலும் ஸ்தூலமாயுள்ளது அன்னமய கோசம். பிராணமய கோசம் இதைக்காட்டிலும் நுட்பமானது. இது அந்நமய கோசத்தின் ஒவ்வொருபாகத்திலும் உட்பிரவேசித்து உள்ளும் புறம்புமாக இருக்கிறது. இதே மாதிரியாக மனோமயகோசமும் மேற்சொன்ன இரண்டுகோசங்களுக்கு உள்ளும்புறம்புமாக இருக்கின்றது. அன்னமயகோசத்தில் எவ்விடத்திலும் பிராணமயகோசம் உட்பிரவேசித்திருப்பதுடன் வெளியிலும் சுமார் 12 அங்குலம் வரையில் எப்பக்கமும் சுற்றி வியாபித்திருக்கிறது. அப்படியே மனோமயகோசமானது மேற்சொன்ன அந்நமயப்பிராணமயகோசங்களை ஒவ்வொருவிடத்திலும் உட்பிரவேசித்தும், வெளியிற் சூழ்ந்தும் அமைந்துள்ளது. இது வெளிமேசூழ்ந்து நிற்பதன் அளவு ஜீவனின் பக்குவத்தை ஒத்ததாகஇருக்கிறது. விஜ்ஞானமய கோசத்தையும் ஆனந்தமய கோசத்தையும் பற்றி இப்படியே உணர்க.

இதற்கு ஓர் உதாரணம் கூறலாம். ஒரு புட்டியில் அடியில் மணலைக் கால் பாகம் கொட்டி, அதன்மேல் ஜலத்தை அரைப்பங்கு கொட்டிவைத்தால் புட்டியில், மணல், ஜலம்,



வாயு, எப்படியிருக்கின்றன? வாயுவானது மணலிலும் ஜலத்திலும் இருப்பதுடன் ஜலத்துக்கு வெளியிலும் இருக்கிறது. ஜலம் மணலுக்கு உள்ளே பிரவேசித்தும் மணலுக்கு வெளியிலும் இருக்கிறது. எப்படி மணலுக்குள் பிரவேசித்தும் வெளிப்புறமாயும் ஜலம் இருக்கிறதோ அப்படியே பிராணமய கோசம் அன்னமய கோசத்துக்கு உள்ளே பிரவேசித்தும் வெளியிலும் இருக்கிறது. எப்படி வாயுவானது ஜலத்திலும் மணலிலும் பிரவேசித்தும் வெளிப்புறமாயும் இருக்கிறதோ அப்படியே மனோமயகோசம், அன்னமய பிராணமயகோசங்களுக்கு உள்ளும்புறம்புமாக இருக்கின்றது. அப்படியே விஜ்ஞானமயகோசமும் ஆநந்தமயகோசமும் மற்ற கோசங்களுக்கு உள்ளும்புறம்புமாக இருக்கின்றன.

ஜீவன் அல்ப ஞானமுள்ளவன் என்றும் ஈசுவரன் 'ஸர்வஜ்ஞன்' என்றும் வேதாந்திகள் வாதிப்பதை நாம் கேட்டிருக்கிறோம். ஜீவனும் முக்தி அடையலாமென்றும், "ஸர்வஜ்ஞன்" ஆகி ஈசுவரனை அடையலாமென்றும் சாஸ்திரங்களில் சொல்லப்படுகிறது. இப்படி ஈசுவரத்தன்மையை அடையும் பொருட்டே "கிஞ்சிஜ்ஞ"ன ஜீவன் போகார்த்தமாக ஸம்ஸாரத்தில் பிரவேசிக்கிறான். மேற் சொன்ன கோசங்களே ஜீவன் அஜ்ஞானம் நீங்கி "ஸர்வஜ்ஞனாகி" ஈசுவரத்தன்மையை அடைய கருவிகளாயும் உபகரணங்களாயும் இருக்கின்றன. இந்தக் கருவிகளையும் உபகரணங்களையும் எப்படி உபயோகிக்க வேண்டும், எப்படி உபயோகித்தால் ஜீவன் முக்தியைப் பெறலாம் என்பதை விளக்கவே சாஸ்திரங்கள் இருக்கின்றன. இந்த சாஸ்திரங்களின் தத்துவத்தை எடுத்துரைத்து நல் வழி காட்டவே குருக்களும் மஹான்களும் சஞ்சரித்து வருகிறார்கள்.

சிலர் ஏழுகோசங்கள் என்றும் சொல்லுவார்கள். இரண்டு விதமாகவும் கோசங்களைப் பிரித்துக் கணக்கிடலாம், ஆநந்தமய கோசத்தை மூன்றாகப் பிரித்தால் ஏழு கோசங்கள் ஏற்படும். இந்த வியாஸத்தில் இந்த நுட்பமான விஷயங்களில் புகுந்து தர்க்கம் செய்ய வேண்டியதில்லை. ஐந்து கோசங்களாகப் பிரித்து ஒவ்வொன்றின் உபயோகத்தையும் தெரிந்துகொண்டால் போதும். இம் மாத்திரத்தாலேயே கோசங்களை ஏழாக விவகரிப்பானேன்? ஆநந்த மய கோசத்தை மூன்றாகப் பிரிப்பானேன்? அம் மூன்றின் பிரயோஜனங்கள் யாவை என்பன தெரியவரும். ஜீவனுக்கு ஐந்து கோசங்கள் உள

வென்று இதுவரையில் சொல்லியிருக்கிறோம். ஐந்தில் கீழ் மூன்றாகிய அந்நமய பிராணமய மனோமய கோசங்கள் போகார்த்தமாக ஏற்பட்ட கோசங்கள். இந்த மூன்று கோசங்கள் தான் ஜீவன் பிறந்து வாழ்ந்து இறந்து, பிறகு பிறக்குமுன் மாறிவிடுகின்றன. ஒரு ஜீவனானவன் பூலோகத்தில் பிறந்து, போகங்களை அனுபவித்து இறந்து, அவனுடைய பாபங்களுக்குத் தகுந்தவிதம் நரகம், பிரேதலோகம் இவைகளில் கஷ்டங்களை அனுபவித்துப் பிறகு புண்ணியத்துக்குத் தகுந்தாற்போல் பித்ருலோகத்திலும் ஸ்வர்க்கத்திலும் சுகங்களை அனுபவிக்கிறான். புண்ணிய அனுபவம் பூர்த்தியானமேல் திரும்ப ஜனனம் எடுக்கிறான். இப்படித் திரும்ப ஜன்மம் எடுக்கும்போது ஜீவன் அடையும் சரீரங்கள் முந்தின ஜன்மத்தில் ஜீவனுக்கு இருந்த சரீரங்கள் அல்ல. இவை நூதன சரீரங்கள். ஆனால் விஞ்ஞானமய கோசமும் ஆனந்தமயகோசமும் ஜீவனுக்கு நிலைபெற்ற சரீரங்கள். இவைகள் ஜன்மத்துக்கு ஜன்மம் மாறுகிறதில்லை. மாறுகிறதில்லை என்பதினால் மாறுபாடுகூட உண்டாவதில்லை என்ற தாற்பரியமல்ல. ஒரு ஜன்மத்தில் உள்ள கோசங்கள் விலகி வேறு கோசங்கள் உண்டாவதில்லை என்று பொருள். ஜீவன் ஜீவன்முக்தி அடையும் வரையிலும் பிறகும் கூட இந்த கோசங்கள் அநேக கோடி வருஷங்கள் நீடித்திருக்கலாம். இந்த கோசங்களின் காலகதியைப்பற்றி இவ்விடத்தில் விசாரிப்பது பொருந்தாது.

அன்னமய, பிராணமய, மனோமய கோசங்களை போகார்த்த சரீரங்கள் என்றும், மற்ற இரண்டு கோசங்களை ஜீவனுடைய சொந்த கோசங்கள் என்றும் சொல்லலாம். இவைகளுடைய உபயோகத்தையும் இவைகள் எப்படி முக்தியடைய சாதனமாய் இருக்கின்றன என்ற விஷயத்தையும் அடுத்த வியாஸத்தில் விவரிப்போம்.

டி. வி. கோபாலஸ்வாமி ஐயர்.

---

## பத்திராதிபர் குறிப்புக்கள்.

---

நமது தலைவர் டாக்டர் பெஸண்டம்மையாரின் தேஹஸ்திதி பழைய நிலைக்கு வந்ததென்று இன்னும் நாம் சொல்ல இயலாவிடினும் மெத்த குணமென்னலாம். அவர் இயற்றும்



காரியங்கள் முன்னினும் அதிகமாகவே நடந்து வருகின்றன. அவர் பம்பாய் சென்று, ரைட் ஆனரபில் சாஸ்திரியாரவர்களைக்கண்டு பேசி வந்ததும், கோக்கலே ஹாலில் நிகழ்ந்த ராஜீய மீட்டிங்குக்கு அக்ராஸனம் வகித்ததும், அவர் நம் தேசத்திற்காகத் தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் ஸமர்ப்பணம் செய்கிறவர் என்பதை யாவருக்கும் நிரூபிக்கப் போதிய சான்றே. நந்தேச மாதாவானவள் அம்மையாருக்கு மேன்மேலும் பலத்தை அருளுவளாக.

* * *

ஆஸ்திரியா தேசத்தின் பிரதானநகரான 'வியன்னா' வில் ஐரோப்பிய தேசங்களின் பிரஹ்மஞானகாங்கிரஸ் நடைபெற்றது. அதற்கு முப்பது தேசங்களிலிருந்து 1600 பிரதிநிதிகள் வந்துகூடினர். ஐரோப்பிய கண்டத்தின் மத்திய பிரதேசங்களாகிய ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹங்கரிமுதலிய ராஜ்யங்கள் முன் நிகழ்ந்த பெரியயுத்தத்தின் பிற்பயன்களான பலகஷ்டங்களை இப்போது தான் அநுபவிக்கின்றன. ஒருவாறு சமாதானம் ஏற்பட்டதெனினும் யுத்தத்தில் அபிவிருத்தியடைந்து வேரூன்றின துவேஷம் இன்னும் ஒழிந்தபாடு இல்லாத இக்காலத்தில் இந்த 'வியன்னா' நகரில் நிகழ்ந்த பிரஹ்மஞான காங்கிரஸானது அன்பும் ஆனந்தமும் நிரம்பி நின்றதெனக் கேள்வியுறுகிறோம். பிரஹ்மஞான சபையின் முதற்கோட்பாடாகிய சகோதரபாவமே துவேஷத்தை நிவாரணம் செய்யும் அரிய மருந்தாவதால் அதுவே ஐரோப்பாவையும், உலகத்தையும் புதிதாய்ச் சீர்பெற நிறுமிப்பதற்காதாரமாகும்.

* * *

வட அமெரிக்கா கண்டத்திய ஐக்கிய மாகாணங்களின் பிரஹ்மஞானக் கன்வென்ஷனானது 'ஷிக்காகோ' நகரில் சென்ற மேமீ கடைசியில் கூடிற்று. முன் வருஷங்களில் 300 பிரதிநிதிகளுக்குமேல் கூடினதில்லை. இவ்வருஷம் 750 பிரதிநிதிகள் வந்து கூடி கன்வென்ஷனானது மிக்க அன்புடனும் உற்சாகத்துடனும்ஐந்துநாள் வரையில் கொண்டாடப்பட்டது. அச்சபைக்கு ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்தியும் ஸ்ரீமான் நித்தியானந்தரும் எழுந்தருளியிருந்தகாரணம்பற்றி அக்கன்வென்ஷன் வெகு விமரிசையாய் நடைபெற்றது என்று கூறப்படுகிறது. அக்கன்வென்ஷனில் நிகழ்ந்த இரண்டு விஷயங்கள் நம்மால் கவனிக்கத்தக்கன. வந்த பிரதிநிதிகளை 7, 8 பேர்களாக சேர்த்து அணி அணியாய் வகுத்து அவர்களை முன்னும் பின்னும் இரண்டு 'ஷிக்காகோ' மெம்பர்கள் நடத்தி அவர்களில் ஒவ்

வொருவரையும் அங்கிருந்த மற்றஒவ்வொரு மெம்பருக்கும் பரிசயம்செய்வித்தனர். பெரிய கான்பிரன்ஸ்களிலும் கன்வென்ஷன்களிலும் ஏராளமான மெம்பர்கள் நமது தேசத்தில் கூடுகின்றனர். அவர்கள் பெரும்பான்மையோர் ஒருவரை ஒருவர் சந்திக்கவும் ஸல்லாபம் செய்யவும் சிநேகிதம் பண்ணிக்கொள்ளவும் சமயம் வாய்க்காமல் பிரிந்து விடுகின்றனர். மேற்கூறிய முறையானது இக்குறையை நீக்கும்.

* * *

அச்சபையில் பொதுநன்மைக்காக அவர்கள் தொகைகள் வசூலித்தமுறையானது நூதனமாயும் அமேரிக்கர்களுடைய ஊக்கத்தையும்உற்சாகத்தையும் காட்டக்கூடியதாகவும் இருக்கின்றது. ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்தியின்பட்டு உத்தரீயத்தை 500 டாலருக்கும் ஸ்ரீமான் நித்தியானந்தரின் பட்டு ஒன்றை 1250 டாலருக்கும் ஏலத்தில்எடுத்துக்கொண்டார்களாம். இவ்விதமாக அவர்களுடைய பாதரக்ஷை முதலிய இதரசாமான்களும் ஏலம் கூறப்பட்டு 4000 டாலருக்குமேல் கிடைத்தது. இத்தொகையை அவர்கள் இருவரும் இந்தியாதேசத்தில் கல்வி அபிவிருத்தி செய்வதற்காக உபயோகப்படுத்தக் கருதுகின்றனர். அக் கன்வென்ஷனில் மேற்சொல்லிய இந்திய வேலைக்காக வசூலித்த 4000 டாலர்தவிர நூதனபிரதேசங்களில் பிரஹ்மஞான சபையின் பிரவிர்த்தியை பரவச்செய்ய 3500 டாலரும் 'லிபரல் கத்தோலிக் சர்ச்' என்ற ஸமரஸ கிறிஸ்தவ மதத்தின் தலைமைச் சாலையின் கடனைத் தீர்க்க 1400 டாலரும் ருஷியாவில் துன்ப நிவர்த்திக்காக 300 டாலரும் வசூலிக்கப்பட்டன. மொத்தம் 9000 டாலர்வரை பொது நன்மைக்காக சேகரிக்கப்பட்டது.

* * *

ஜகத்குருவின் அதிசமீப வருகையைப்பற்றி, பிரஹ்மஞான சபையிலும் உதய திசை நக்ஷத்திர சங்கத்திலும் சம்பந்தமற்ற பலர் உலகத்தில் பற்பல பிரவிர்த்திகளில் கியாதி பெற்றவர்கள் வற்புறுத்தி வருகின்றனர். ஆங்கில தேசத்தில் ஸ்திரீகளுக்கு 'வோட்டு' உரிமை கிடைக்க வேண்டுமென்று முயன்றுவந்த மிஸ் பாங்கர்ஸ்டு என்றவொருமாது ஜகத்குருவின் வருகை சமீபித்து நிற்பதை வற்புறுத்தி வருகின்றனர். அதுபோல் மிஸ்டர் வில்லியம்ஸ் என்ற ஒரு அமேரிக்க மதபோதகர் 'ஆசாரியனது வருகையின் மகிமையைப்பற்றி ஒரு கிரந்தம் எழுதி அது அநேக பதிப்புக்களில் அச்சிடப்பட்டுவரு



கின்றது. கிறிஸ்தவர்களில் ஒரு கோஷ்டியாகிய 'ரக்ஷண்ய சேனை'யின் தேச அந்தரங்க பிரதிநிதியாகிய கமிஷனர் பூத்டக்கர் என்போர் ஆஸ்திரேலியாவில் 'அடலயிட்' என்னும் நகரில் 'கிறிஸ்துவின் வருகை' என்ற விஷயத்தைப் பற்றி பிரசங்கம் செய்து கிறிஸ்துவானவர் இரண்டு மூன்று வருஷங்களில் மனிதர்களுள் தோன்றுவாரெனக் கூறினர். இமயமலையின் கிழக்குப் பிரதேசங்களில் மைத்திரேய போதிஸத்துவர் தோன்றப் போகின்றனர் என்ற நம்பிக்கையானது பரவி நிற்கின்றதென, முன் வங்காள கவர்னராயிருந்த லார்ட் ரோனல்ட்ஷே என்பவர் 'இடி முழக்கப் பூமிகள்' என்ற நூதன கிரந்தத்தில் வரைந்துள்ளார். பர்மாவிலோ ஆயிரக்கணக்காய் அங்கிருக்கும் பௌத்த மதஸ்தர்கள் சில வருஷங்களாக அவ்வாசாரியரது வரவை எதிர்பார்த்து அவருக்குரிய ஆலயங்களையும், கூடங்களையும் கட்டி வருகின்றனர். இவ்விதமாக அவர் வருகையானது பற்பல வழிகளில் உலகத்தோருக்கு அறிவிக்கப்பட்டு வருகின்றது. பௌத்தர்களால் போதிஸத்வரென்றும் இந்துக்களால் ஸ்ரீ கிருஷ்ணபகவான் என்றும் கிறிஸ்தவர்களால் கிறிஸ்துவென்றும் கூறப்படும் பரம ஆசாரியனது வருகை அடுத்து நிற்க, அவர் எடுத்துவைக்கும் திருவடிகளின் சபதம் முன் ஒலிப்பது போலும்.

* * *

நாளிது செப்டம்பர்மீ 2, 3உகளில் ராமநாதபுரம் ஜில்லா திருப்பூவணம் க்ஷேத்திரத்தில் அவ்வூர் சாரதா ஸன்மார்க்க ஸமாஜத்தின் வருஷ நிறைவு உற்சவம் கொண்டாடப்பட்டதில் அச்சபையின் உபதலைவரான சகோதரர் எஸ். முத்துஸாமி பிள்ளை F. T. S. அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி மதுரையிலிருந்து சகோதரர் எம். நாராயணசாமி அய்யரவர்கள் 'ஸநாதன தர்மம்' என்ற விஷயத்தைப்பற்றியும் சிவகங்கையினின்று சகோதரர் பி. எஸ். ராமஸ்வாமி அய்யரவர்கள் 'சகோதரபாவத்தைப் பற்றியும் பிரஹ்மஞானத்தால் ஏற்படும் விளக்கத்தோடு பிரஸங்கம் செய்தனர். நான் 'ஜகத்குருவின் வருகையைப்பற்றி உபந்நியாஸம் செய்தேன். மேற்சொல்லிய பிரஸங்கங்களை அக்கூட்டத்திலிருந்த ஜனங்கள் கவனத்துடன் கேட்டு அன்பு பாராட்டினர்.

* * *

ஜப்பான் தேசத்தில் நாளிது ஸெப்டெம்பர்மீ ஆரம்பத்தில் பூகம்பத்தாலும் கடல் கொதிப்பாலும் ஏற்பட்டுள்ள மகத்தான

விபத்தால் ஏராளமான ஜனச்சேதமும் அபரிமிதமான பொருள் நஷ்டமும் உலகத்தோருடைய மனதை உருக்கி வருத்துகின்றன. ஜப்பானின் பிரதான நகராகிய 'டோக்கியோ'வில் மட்டும் சம்பவித்திருக்கும் ஜனச்சேதம் 130000 முதல் 5,00,000 வரை மதிக்கப்படுகின்றது 'பஸிபிக்' மகாஸமுத்திரத்தில் வடவாக்கினியின் சேஷ்டைசென்ற சிலகாலமாக ஏற்பட்டு தென் அமெரிக்காவிலுள்ள 'சிலி' தேசமுதல் ஜப்பான்வரை பரவி நிற்கின்றது. 'பஸிபிக்' ஸமுத்திரத்தின் மத்தியப் பிரதேசங்களில் தீவுகள் தோன்றினபோலவும் 'சிலி' தேசத்தை அடுத்து கடலின் தளமே உயர்ந்துவிட்டதாகவும் சில காலமாக சமாசாரம் வெளியிடப்பட்டு வருகின்றது. இப்போது வடக்கு "பஸிபிக்" சமுத்திர பிரதேசத்தில் ஜப்பான் தேசத்திற்கு பெரிய தீங்கு விளைவித்த பூகம்பம் முதலியவை நிகழ்ந்திருக்கின்றன. இச்சின்னங்களெல்லாம் அப்பக்கத்தில் காலக்கிரமத்தில் ஏற்படத்தக்க பூகோள மாறுதலை சூசிப்பிக்கின்றன. ஐந்தாவது மானிட வர்க்கத்திற்குப்பிறகு தோன்றும் ஆறாவது மானிட வர்க்கத்தாரின் உறைவிடமாக பூமிப்பிரதேசமானது இப்போதிருக்கும் கிரௌஞ்ச துவீபத்தைக்காட்டிலும் வேறான சாக துவீபமாகும். இப்போது நமது அண்டத்தில் ஏற்பட்டிருக்கும் தரை கடல்களின் அமைப்பானது அக்காலத்தில் மாறி நிற்கும். அத்துவீபமானது பெரும்பாலும் இப்போதுள்ள 'பஸிபிக்' ஸமுத்திரப்பிரதேசத்தை வியாபித்துநிற்கும். அக்காலம் இன்னும் அநேகமாயிரம் வருஷங்கள் சென்றபின் ஏற்படினும் இது முதல் அத்துவீபம் தோன்றுவதற்குரிய முயற்சிகள் ஆரம்பிக்கின்றன.

ஏ. ரெங்கஸ்வாமி அய்யர்.

---

## பிரஹ்மஞானப் பிரசாரம்

---

தென்னிந்தியாவில் ஒற்றர் சங்கக்கமிஷனராயிருந்த ஸ்ரீமான் பியர்ஸ் என்பவர் காலே மாஹிந்த காலேஜிலிருந்து, யாழ்ப்பாணத்துப் பரமசிவ காலேஜுக்கு ப்ரின்ஸிபாலாகப் போகிறார். காலேயிலிருந்த பிரஹ்மஞானக் கிளைச்சபைக்கு அவரால் மிக்க நலம் ஏற்பட்டதுபோல் யாழ்ப்பாணத்திலும் பிரஹ்மஞான சபை கிளைத்து விளங்கும் என நம்புகிறோம்.



ஸர் தி. ஸதாசிவ ஐயரவர்கள் அக்டோபர்ீ 8-ஆம் தேதி புறப்பட்டு, திருச்சி, திண்டுக்கல், பழநி, பெரியகுளம், எட்டையாபுரம் இவ்விடங்கட்கு போவார். பிறகு கடம்பூரில் ஜில்லா கான்பரன்ஸுக்கு அக்ராஸனம் வகித்து, அம்பாசமுத்திரம், திருநெல்வேலி, ஸ்ரீவைகுண்டம், தூற்றுக்குடி, கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், தநுஷ்கோடி, மண்டபம், மானாமதுரை முதலிய இடங்களில் பிரசங்கம் செய்து விட்டு, நவம்பர்ீ 12உ சிவகங்கையில் நடக்கும் ஸமாகமத்திற்கு இருந்து, அடையாறு திரும்புவர்.

---

லாட்ஜ் ஆர்கனைஸர் ஸ்ரீமான் யம். சுப்பிரமணிய ஐயர், திண்டுக்கல், பழனி சென்று மெம்பர்களிடத்து கான்பரன்ஸ்; சகோதர தர்மவிஜயம் இவைபற்றிய ஏற்பாடுகளைச் செய்து, மதுரை வந்து ஈ. யஸ். டி. எஸ். மீட்டிங்குகள் நடத்தி, அங்கும் ஸஹோதர தர்மவிஜயக் கமிட்டீ ஒன்று ஏற்படுத்தினர். மானாமதுரையில் ஆத்மார்த்த வாழ்க்கையைப்பற்றி பிரசங்கம்செய்து, கான்பரன்ஸ் நடத்தவும் பேசிவைத்திருக்கிறார். பரமக்குடி, இராமநாதபுரம் இவ்விடங்களில் மெம்பர்களைக் கண்டுபேசி, இராமேசுவரம், தநுஷ்கோடி, மண்டபம் இவ்விடங்களில் பிரஹ்மஞான சிந்தையுள்ளவர்களோடு ஸம்பாஷித்து, கடம்பூர் கான்பரன்ஸ் விஷயம் ஏற்பாடுசெய்து, திருநெல்வேலியில் ஈ. எஸ்., டி. எஸ். மீட்டிங்குகள் நடத்தி, ஸஹோதர தர்மவிஜயக் கமிட்டியும் நியமித்தனர். அங்கு பிரஹ்மஞானஸபையில் வாசகசாலையும் ஒன்று ஏற்படுத்தி, அம்பாசமுத்திரம், ஸ்ரீவைகுண்டம் இவ்வூர்களில் மெம்பர்களைக்கண்டுபேசி, பிரஹ்மஞானக் கிளைச்சங்க அபிவிருத்தியைப்பற்றிச் சில ஏற்பாடுகள்செய்து, தூற்றுக்குடியில் மெம்பர்கள் மீட்டிங்கு ஒன்று நடத்தினர். யாழ்ப்பாணத்தில் "தர்மம்" என்பதைப்பற்றி பிரசங்கித்து, கண்டியில் புது மூன்று பெயர்களைக்கொண்டு ஒரு ஸெண்டர் ஏற்படுத்தியிருக்கிறார். அவைகளின் அபிவிருத்தியின் பொருட்டு ஒரு புத்தகசாலை ஏற்படுத்தி, கொழும்பில் அறிவு, கர்மம், பாபம் இவைகளைப்பற்றி பிரசங்கித்து, ஸ்டார், ஈ. எஸ். மீட்டிங்குகள் நடத்தி, திருச்சிராப்பள்ளி சென்றார். அங்கு ஈ. எஸ். மீட்டிங்குகள் நடத்தி, ஸஹோதரதர்ம பிரசார விஷயமான ஏற்பாடுகள்செய்து, அடையாறு திரும்பினர். இதில் ஞானோதயத்திற்கு 25 சந்தாதார்கள் சேர்த்ததுடன், பற்பலவிடங்

களிலும் "ஸஹோதரதர்ம விஜய" முயற்சிக்காகவும் ஏற்பாடு செய்துவந்திருக்கிறார்.

---

திருநெல்வேலியில் ஸ்ரீமான் காந்திமதிநாதபிள்ளை, பி.ஏ., ஸகோதரர்கள் ஆர். சுப்பிரமணிய ஐயர், பி.ஏ., பி.எல். நெல்லையப்பபிள்ளை, பி.ஏ., ஸாது கணபதி பந்துலு பி.ஏ., பி.எல்., பனைமனாதபிள்ளை, ஸ்வாமி பரமானந்த ஸாது, எஸ். கந்தசாமிபிள்ளை ஆகிய எல்லோருமாகச்சேர்ந்து சந்தா சேர்த்து, சிந்துபூந்துறை தக்ஷிணாமூர்த்தி மடத்தில் பிரஹ்மஞான வாசகசாலை ஏற்படுத்தி, அதற்கு தியாஸபிஸ்டு, அடையாற்று புல்லட்டின், ஹெரல்டு அவ் தி ஸ்டார், ப்ரதர்ஸ் அவ் தி ஸ்டார், தாரக தூதன், ஞானோதயம், நியூ இந்தியா, யங் மிடிஸென் முதலிய பத்திரிகைகளைத் தருவித்து, சகலரும் படித்தறியுமாறு ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

---

இலங்கைத்தீவில் கண்டிமா நகரத்தில் மூன்று மெம்பர்கள் பிரஹ்மஞான சபையிற் சேர்ந்து அவ்விடத்திலொரு கிளைச் சங்கத்தை ஸ்தாபிக்க முதல்படியாய் ஒரு ஸெண்டர் ஸ்தாபித்தார்கள். காண்டி பாரெஸ்ட் ஆபிஸர் ஸ்ரீமான் T. கார்த்திகேயன் அதன் காரியதரிசியாவர்.

---

சென்ற ஆகஸ்ட்மீ 5வ ஞாயிற்றுக்கிழமையன்று ஈரோட்டில் இண்டர் லாட்ஜ் மீட்டிங்கு ஒன்று நடைபெற்றது. கோயமுத்தூர் சகோதரர் ஸ்ரீமான் வி. வி. வெங்கட்டரமணய்யங்கார் அவர்கள் அக்கிராஸனம் வஹித்தார்கள். வெளியூர்களிலிருந்து சுமார் 10 சகோதரர்கள் வந்திருந்தார்கள். காங்கயம் லாட்ஜிலிருந்து மட்டும் 5 சகோதரர்கள் வந்தார்கள். காலையில் சபையின் அங்கத்தவர் மீட்டிங்கும், காரியாலோசனை மீட்டிங்கும் நடைபெற்றது. கோயமுத்தூர் ஜில்லா காரியதரிசியான ஸ்ரீமான் சகோதரர் P. M. சக்கரபாணி செட்டியார் அவர்கள் பிரார்த்தனையுடன் ஓர் சிறு உபந்யாஸம் செய்தார். முடிவில் ஸபையின் பிரஸிடெண்டு சில வார்த்தைகள் சொல்லி காலை மீட்டிங்குகள் முடிந்தன. மாலையில் ஓர் ஸம்பாஷணை மீட்டிங்கும், சேலம் சகோதரர் ஸ்ரீமான் முத்துசாமி ஐயரவர்களால், "ஜகத் குருவின் வருகை" என்ற விஷயத்தைப்பற்றிய ஓர் உபந்யாஸமும் நடைபெற்றது. மாலை 6 மணிக்கு ஈரோடு முன்சீப் மகா-ா-ா-ஸ்ரீ M. R. கோவிந்தராவ் அவர்கள் அக்கிராஸனத்தின் கீழ், ஸ்ரீமான் வெங்கட்டரமணய்யங்கார் அவர்கள் "ஜன ஊழியம்" என்ற விஷயத்தைப்பற்றி தமிழில் அரியதோர் உபந்யாஸம் செய்தார். உள்ளூர் பொது ஜனங்கள் பெருங்கூட்டமாக வந்திருந்தார்கள். அடுத்த இண்டர் லாட்ஜ் மீட்டிங்கு காங்கயத்தில் நடப்பதாகத் தீர்மானமாயிற்று. இந்த மீட்டிங்கு சமயத்தில், சேலத்திலிருந்து வந்திருந்த சகோதரி லக்ஷ்மி அம்மாளவர்கள் சுமார் 30 புத்தகங்களை காங்கயம் லாட்ஜுக்கு வெகுமதியாக அளித்தது பாராட்டத் தக்கது. ஈரோடு லாட்ஜின் உபயோகத்துக்காகவும், புத்தகங்கள் வாங்குவதற்கும் ஸ்ரீமான் வெங்கட்டரமணய்யங்காரவர்கள் 10 ரூ நன்கொடை அளித்தார். வந்திருந்த சகோதரர்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் ஈரோடு சகோதரர்கள் வெகு கவலையுடன் மிக திருப்திகரமாக செய்தார்கள். (L. சுப்பிரமணியன் லாட்ஜ் ஆர்கனைஸர்.)



---

பேரளத்தில், தஞ்சைஜில்லா பிரம்மஞானக் கிளைச்சங்கங்களின் கான்பரென்ஸ் நாளதுமீ 11, 12-ந் தேதிகளில் திவான் பஹதூர். ஸர். டி. ஸதாசிவய்யர் அவர்களின் அக்ராஸனத்தின் கீழ் கூடிற்று. 11வ காலை 9-15 மணிக்கு கான்பரென்ஸ் ஆரம்பமாகி அக்ராஸனாதிபதியவர்களுக்கு ஓர் உபசாரப்பத்திரம் வாசித்து அளிக்கப்பட்டது. அதில் பிரம்ம வித்யா மஹா சபையின் உயர்நோக்கங்களையும் அந்நோக்கங்களின் பிரகாரம் இவ்வுலகிற் பல்வேறு துறைகளிலும் பிரவர்த்தித்துச்செய்துவரும் வேலைகளையும் பற்றிச் சொல்லிவிட்டு, அவ்வுயர் லக்ஷ்யங்களில் ஈடுபட்டு நமது ஐடர் அவர்கள் செய்துவரும் தொண்டின் பெருமையை எடுத்துக்காட்டியிருந்தது. அதன் வாசகப் பொருத்தமும், அக்ராசனரைப்பற்றிய ஸ்துதி வசனங்கள் யாவுமின்றி வரையப்பட்டிருந்த விதமும் இம்மாதிரி பத்திரங்கள் தயார் செய்பவர்களுக்கு ஓர் மாதிரியாய் விளங்குமென்பதிலையமில்லை. அக்ராஸனாதிபதியவர்கள் முகவுரையாகச்சில வார்த்தைகள் பேசியபிறகு, மதுரை பிரம்மஸ்ரீ A. ரெங்கஸ்வாமி அய்யர் B, A. B. L, அவர்களால், விவேகம் என்ற விஷயத்தைப்பற்றி ஓர் அரிய உபந்யாஸம் செய்யபட்டது. அதில் தற்காலம் பலருடைய மனங்களையும் அல்லல் படுத்திக்கொண்டிருக்கும் சில சிக்கலான பிரச்னைகளை எடுத்துரைத்து, அவைகளை எவ்விதம் யுக்தாயுக்தமறிந்து விவேகத்துடன் செய்தால் உண்மையான பிரயோஜனம் கிட்டுமென்று

வெகு தெளிவாயும் கேட்போர்க்கு பிரயோஜனமளிக்கக்கூடியதாயும் சொல்லப்பட்டது. மாலையில் பிரச்னோத்தர ஸம்பாஷணை நடந்தபிறகு, எனங்குடி ஸ்ரீமான் V. இராமசந்திர நாயுடு அவர்களால் ஸ்ரீ ஜகத்குருவின் வருகை என்பதைப் பற்றி சிறந்ததோர் உபந்யாசம் செய்யப்பட்டது.

மறுநாட்காலையில் பிரம்மஸ்ரீ P. R. சுந்தரராஜய்யர் அவர்களால் பிரஹ்மவித்யாவும் பிரஹ்மவித்யாசபையும் என்ற விஷயம் கேட்போர்க்கு அனேக சந்தேகங்களுக்கு ஸமாதானம் ஏற்படும் வண்ணம் வெகு உருக்கமாய் உபந்யசிக்கப்பட்டது. பிறகு, சிதம்பரம் பிரம்மஸ்ரீ T. H. ஜகந்நாதய்யர் அவர்களால் ஸம்ஸ்காரங்கள் என்பதைப்பற்றி வெகு தெளிவாய் அவைகளின் விவரங்களையும் உபயோகங்களையும் பற்றி உபந்யாசம் செய்யப்பட்டது.

மாலையில் அக்ராஸனாதிபதியவர்களின் ஸமாப்தியுரைகளுடன் கான்பரென்ஸ் முடிவடைந்தபிறகு, மதுரை ஹைக்கோர்ட்டு வக்கீல் பிரம்மஸ்ரீ A. ரெங்கஸ்வாமி அய்யர் அவர்களால் தற்கால ராஜகீய நிலைமை என்ற விஷயத்தைப்பற்றி உபந்யாசம் ஆனதும் அக்ராஸனர் ஸர். டி. ஸதாசிவய்யர் அவர்களுக்கும் மதுரை மகா-ா-ா-ஸ்ரீ A. ரெங்கஸ்வாமி அய்யர் அவர்களுக்கும் மேனாங்குடி ஸ்ரீமான் M. C. மருதவாணம் பிள்ளையவர்களால் மாலை சூட்டப்பட்டு சபை கலைந்தது.

**ஆர். சுவாமிநாதய்யர்.**

---

**மதுரை ஜில்லா பிரஹ்மஞானக்கிளைச் சபைகளின் கான்பரன்ஸ்** சென்ற ஆகஸ்டுமீ 18உ ஸ்ரீவில்லிபுத்தூரில் நிகழ்ந்தது. மதுரை ராஜபாளையம், சாத்தூர் முதலிய விடங்களிலிருந்து பிரதிநிதிகளும் அன்பர்களும் வந்திருந்தனர். காலை 7 மணிக்கு ஈயஸ். மீட்டிங்கு நடந்து பிறகு கான்பரன்ஸ் 8-30 மணிக்கு இவ்வூர் ஹைஸ்கூல் ஹாலில் மகா-ா-ா-ஸ்ரீ யம். நாராயணஸ்வாமி ஐயரவர்கள், பி. ஏ. பி. எல். (மதுரை ஹைக்கோர்ட்வக்கில்) அக்ராஸனத்தின் கீழ் ஆரம்பித்தது. முதன் முதல் கடவுள் வணக்கமும் பிறகு அக்ராஸனரின் முகவுரையும் ஆனவுடன் மதுரை ஸ்ரீமான் ஆர். ரங்கஸ்வாமி ஐயர் பி. ஏ. பரோபகாரத்தையும் மதுரை லாட்ஜ்காரியதரிசியாகிய ஸ்ரீமான் வி. விசுவநாத ஐயர் பி. ஏ., பி. எல். ‘ஜகத்குருவின் வருகையையும்’ பற்றிப்பேசினார்கள். அநேகர் வரமுடியாமை பற்றி அநுதாபப்பட்டு எழுதியிருந்த கடிதங்களை வாசித்தனர்.



பதினோரைமணியானதும் சபை கலைந்து மாலை 2 மணி முதல் 3மணிவரை காரியாலோசனை நடந்தது. பிறகு ராஜபாளையத்து ஸ்ரீமான் ஸுப்பராஜா அவர்கள் “பிரஹ்மஞானத்தைப் பற்றி” யாவரும் பிரமிக்கத்தக்கபடி உபந்யஸித்தார். ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீமான் A. ஸ்ரீநிவாஸாசாரியரவர்கள் பி. ஏ. எல். டி. பகவத்கீதை இரண்டாம் அத்தியாய விஷயத்தை தெள்ளிய தமிழில் ஓர் பிரஸங்கம் செய்தார். பிறகு ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீமான் கிருஷ்ணஸ்வாமி ஐயர் “உலகின் தற்கால நிலைமை” யைப்பற்றி ஓர் பிரஸங்கமாரி பொழிந்தனர். ‘தியாஸபியும் ஸநாதன தருமமும்’ என்ற அக்ராஸனரின் முடிவுரையை எல்லோரும் மிகக்கவனமாய்க் கேட்டனர். கடைசியில் ஏக கரகோஷத்தினிடையில் வரவேற்புக்கமிட்டியின் தலைவரான ஸ்ரீ A. ஸ்ரீநிவாஸாசாரியர் அக்ராஸனருக்கு பூமாலை சூட்டி வந்தனோபசாரம் செய்ய, ஸ்ரீ யன். ராமஸ்வாமி ஐயர் பி.ஏ., பி.எல். அவர்களும் வந்தனஞ்சொல்லி முடித்தார். மதுரை ஸ்ரீமான் யம். எஸ். சுந்தரசர்மா, பி.ஏ., அன்றிரவு 7-மணிக்கு நிழல்படக் காட்சியொன்று காண்பித்தனர். தென்னிந்திய ஆலயங்களிலுள்ள அநேக பிரதிமைகளின் படங்களை தாமே தயாரித்து, அவைகளால் நம் பிராசீன சில்பங்களின் உயர்வையும் அவற்றின் பல ரகஸ்யார்த்தங்களையும் நன்கு நிரூபித்துக்காட்டினார்.

மதுரை ஸ்ரீமான் யன். ராமஸ்வாமி ஐயரவர்கள், பி ஏ., பி.எல். அவர்களே குரூப் காரியதரிசியாக அடுத்த வருஷத்துக்கும் நியமிக்கப்பெற்றிருக்கிறார். அடுத்த கான்பரன்ஸ் சாத்தூரில் கூடுமாறு தீர்மானிக்கப்பட்டது.

---

அனந்தபுரத்தில் ஸர். தி. ஸதாசிவ ஐயரவர்சள் அக்ராஸனத்தின் கீழ் பிரஹ்மஞானஸபைக் கான்பரன்ஸ் ஒன்று சென்ற மீ 18உ காலை 9-30 மணிக்கு கூடியது. காரியதரிசியாகிய ஸ்ரீமான் Y. V. அப்பாஜிராவ் அவர்கள் வாசித்த உபசரணைப்பத்திரத்தில் அப்பட்டணத்தின் மாஹாத்மியத்தைச் சுருக்கமாய்ச் சொன்னார். அக்ராஸனரவர்கள் சொன்னதில், ஒரு பட்டணத்திற்கு மாகாத்மியம் அதிலிருக்கும் புண்ய புருஷர்களையிட்டு ஏற்படுகிறதென்றார். மேலும் அவர் தம் பாலியத்தில் மேல் நாட்டுச் செல்வச் சிறப்பை மிக வியந்ததாகவும், இப்போது அதைவிட எத்தனையோ சிலாக்கியமான மேன்மையை ஹிந்துமத இலக்கியங்களிற்

கண்டு கொண்டதாகவும், ஸர்வமதங்களையும் பக்திசிரத்தையோடு படித்தல் வேண்டுமென்பதாகவும் ஹிந்து மதம்முழுதும் யோகத்தின் ஆதாரத்தின்மேல் ஏற்பட்டிருக்கிறதென்பதாகவும், கீதை ஓர் யோகசாஸ்திரமென்பதாகவும், இவற்றையெல்லாம் பிரஹ்மஞானசபை நன்கெடுத்துரைத்து மத ரகசியங்களை விளக்கியுள்ளதென்பதாகவும் கூறி முடித்தார். மறுபடி மாலையில் 4மணிக்கு கான்பரன்ஸ் கூடியதில் மதனப்பள்ளி காலேஜ் ப்ரின்ஸிபால் ஸ்ரீமான் வி. எஸ். த்ரிலோகிகர் அவர்கள் "பிரஹ்மஞானம், ஸ்வாநுபவ ஆராய்ச்சியால் தேர்ந்த ஓர் சாஸ்திரம்" என்பதைப் பிரஸங்கித்தனர். 19ல் மாலை பிரஹ்மஸ்ரீ தி. ராமசந்திரராவ் அவர்கள் ஜகத்குரு வருகை பற்றி சுமார் 1½-மணி நேரம் ஆர்வத்தோடு தெலுங்கில் உபந்யஸித்தார். கடைசியாக மெம்பர்கள் அடிக்கடி கலந்து பேசக்கட்டடமொன்று தேவை என்பதாகவும் பல்லாரி, பங்களூர், மைஸூரைப்போல் ஸ்திரீஸங்கங்களை ஏற்படுத்தினால் தான் நம் கிளைச்சபைகள் தழைத்தோங்கும் என்பதாகவும் அக்ராஸனர் முடிவுரை கூறினர். எல்லோரும் கரகோஷம் செய்ய அக்ராஸனர் பூமாலை சூட்டப்பெற்றதும் கான்பரன்ஸ் சுபமாய் முடிவுற்றது.

---

மதராஸ் ஜில்லா பிரஹ்மஞானதாரக சபைகளின் கான்பரன்ஸ் 26ல் மைலாப்பூரிலுள்ள தேசீயப் பெண்பாடசாலைக் கட்டடத்தில், ரிடையர்ட ஸப் ஜட்ஜ் ஸ்ரீமான் தி. ராமசந்திர ராவ் அவர்களின் அக்ராஸனத்தின் கீழ் கூடியது. பட்டணத்துக் கிளைச்சபைகள், பரங்கிமலை, அடையாறு இவ்விடங்களிலிருந்து பிரதிநிதிகள் வந்திருந்தனர். இது இனிது நிறைவேறியதற்கு முக்கிய காரணஸ்தர்கள் குரூப் ஆர்கனைஸிங் செக்ரிடரி ஸ்ரீமான் ஜி. கோபாலசாமி செட்டியார் அவர்களும், லாட்ஜ் ஆர்கனைஸர் ஸ்ரீமான் பி. ஆர். சுந்தரராஜ ஐயரவர்களுமேயாவர்.

---

திருநெல்வேலி ஜில்லா கடம்பூரில் அடுத்த மாதம் ஓர் கான்பரன்ஸ் ஸ்ரீ. தி. ஸதாசிவ ஐயரவர்கள் அக்ராஸனத்தின்கீழ் கூடும்., அன்பர்களனைவரும் விஜயம் செய்யவேண்டுமாகக் கோரப்படுகிறது.

PRINTED AT THE BESANT PRESS, MADRAS